கலை நிலயம்

V. 5 No. 38 29 Sep. 1932

SL
ஊ211, N28KN
N32.5.38.
188973

235

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 5.] 1932 ஆம் செப்டம்பர் மீ 29உ [No. 38

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	741
2.	தமிழ்ப்பாடம் நளவெண்பா - கலிதொடர்காண்டம்	743
3.	நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 8-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L.,	745
4.	ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 4. களம் 3.) ஷேக்ஸ்பியர் நாடகம்	747
5.	பொதிகைநிகண்டு (பலபொருட் பெயர்த் தொகுதி) S. வையாபுரிப் பிள்ளை B.A. B.L.	749
6.	அப்பர் (64 கலைகள்—தர்க்கம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L.	751
7.	கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்) T. N. சேஷாசலம். B.A. B.L.	752
8.	சொல்லூடாட்டம் - 9	756
9.	வர்த்தமானம்	759

கலாநிலயம்

அரவிந்தரும் அரசியலும்.

விருப்பமும் கருவியும் என்று யாம் வரைந்துமுடித்த கட்டுரைகளை ஓதிய வோர் நண்பர், யாம் நல்லவராக வேண்டுமென்பதன்றி வேறோர் விருப்பம் இருப்பது பிழையென்பதையும், அதற்குக் கலைகளன்றி வேறோர் கருவி இல்லையென்பதையும் யாம் எடுத்துக் காட்டியிருப்பதை வியந்து எம்மைப் பலபடப் பாராட்டி எமக்கு வரைந்துள வோர் கடிதத்தில், "ஆம், என்றாலும் நீங்கள், எல்லாம் அவரவர் தாமாக அடைய வேண்டுமென்னும் கருத்துடையவராக இருக்கின்றீர்களே. அரசியல் வாதங்களில் முயன்று அதனைச் சீர்திருத்தித் தக்கமுறைகளையும் மனிதர்களையும் அமைத்தால், ஜனங்கள் அவ்வளவு பேரும் ஒருங்கே விரைவில் இந்த நல்நிலை அடையமாட்டார்களோ? இதனை நீங்கள் விளக்கினால் எனக்கும் என்போன்ற சந்தேகமுடைய மற்றவர்க்கும் மிகவும் உபகாரமாயிருக்குமே. நீங்கள் அருமையாய் எடுத்துக்காட்டுகின்ற அந் நன்னிலையே எல்லாரும் அடைதற்குரிய மேன்மை என்பது முக்காலும் உண்மையே. பற்பல இயக்கங்களின் வாய்ப்பட்டு உழல்கின்ற இக்காலத்தில் இவைகளினின்று தப்பிச் சனங்கள் அந்த மேன்மையை அதிவிரைவில் அடைய வேண்டும் என்னும் ஆசையால் தூண்டப்பட்ட நான், அரசியலமைப்பைக் கொண்டு இந்த நன்மையைப் பெறுவது இயலுமாயின் காலதாமத மில்லாமல் கைகூடிவரும் பாக்கியம் நமக்கு இயலுமோ, என்றுவோர் ஐயத்தினால் இப்படி உங்களைக்கேட்கின்றேன். தயவு செய்து என் கேள்வியை வேறு விதமாய் எண்ணிக் கொள்ளாதீர்கள்" என்று கேட்டிருக்கின்றார்.

இதற்கு விடையாகக்கூடிய விடயங்கள் எம் தலையங்கங்களில் பற்பல விடங்களில் பல் வேறு வகைகளில் அடங்கி யிருக்கின்றன. ஆயினும் அரசியல்அமைப்பு எத்தூரம் உதவவல்லதென்பதை ஸ்ரீ அரவிந்தகோஷின் சொற்களைக் கொண்டே தேர்ந்துகொள்வது நலமெனக் கருதி, அவர் பதின்மூன்று வருடங்களுக்குமுன் எழுதிய ஓர் கட்டுரையினின்று கீழ்வரும் பாகத்தைப் பெயர்த்துத் தருகின்றோம்:—

What, after all, is this State idea, this idea of the organised community to which the individual has to be immolated? Theoretically it is the subordination of the individual to the good of all that is demanded; practically it is his subordination to a collective egoism, political, military, economic, which seeks to satisfy certain collective aims and ambitions shaped and imposed on the great mass of the individuals by a smaller or larger number of ruling persons who are supposed in same way to represent the community. It is immaterial whether these belong to a governing class or emerge as in modern States from the mass partly by force of character, but much more by force of circumstances; nor does it make an essential difference that their aims and ideals are imposed more by the hypnotism of verbal persuasion than by overt and actual force. In either case there is no guarantee that this ruling class or ruling body represents the best mind of the nation or its noblest aims or its highest instincts.

Nothing of the kind can be asserted of the modern politician in any part of the world: he does not represent the soul of a people or its aspirations; what he does usually represent is all the average pettiness, selfishness, egoism, self-deception that is about him and these he represents well enough as well as a great deal of mental incompetence and moral conventionality, timidity and pretence. Great issues often come to him for decision but he does not deal with them greatly; high words and noble ideas are on his lips, but they become rapidly the clap-trap of a party. The disease and falsehood of modern political life is patent in every country of the world and only the hypnotised acquiescence even of the intellectual classes in the great organised sham, the acquiescence that men yield to everything that is habitual and makes the present atmosphere of their lives, cloaks and prolongs the malady. Yet it is by such minds that the good of all has to be decided, to such hands that it has to be entrusted, to such an agency calling itself the State that the individual is being more and more called upon to give up the government of his activities. As a matter of fact, it is by no means the good of all that is thus secured, but a great deal of organised blundering and evil with a certain amount of good which makes for real progress, because Nature

moves forward always in the midst of all stumblings and secures her aims in the end as often in spite of as by means of man's imperfect mentality.

But even if the governing instrument were better constituted and of a higher mental and moral character, even if some way could be found to do what the ancient civilisations by their enforcement of certain high ideals and disciplines tried to do with their ruling classes, still the state would not be what the State idea pretends that it is. Theoretically, it is the collective wisdom and force of the community made available and organised for the general good; practically, it is so much of the intellect and power available in the community as the particular machinery of State organisation will allow to come to the surface which uses that machinery but is also caught in it and hampered by it and hampered as well by the large amount of folly and selfish weakness that comes up in the same wave. Doubtless, this is the best that can be under the circumstances, and Nature, as always, utilises it for the best; but things would be much worse if there were not a field left for a less trammelled individual effort doing what the State cannot do, deploying and using the sincerity, energy, idealism of the best individuals to attempt that which the State has not the wisdom or courage to attempt, getting that done which a collective conservatism and imbecility would either leave undone or actively suppress and oppose. It is this which is the really effective agent of collective progress. The State sometimes comes in to aid it and then, if its aid does not mean undue control, it serves a positively useful end; as often it stands in the way and then serves either as a brake upon progress or supplies the necessary amount of organised opposition and friction always needed to give greater energy and a more complete shape to the new thing which is in process of formation. But what we are now tending towards, is such an increase of organised State-power and such a huge irresistible and complex State activity as will either eliminate free individual effort altogether or leave it dwarfed and cowed into helplessness. The necessary corrective to the defects, limitations and inefficiency of the State machine will disappear.

The organised State is neither the best mind of the nation nor it is even the sum of the communal energies. It leaves out of its organised action, suppresses or unduly depresses the working force and thinking mind of important minorities, often of those which represent that which is best in the present and that which is developing for the future. It is a collective egoism much inferior to the best of which inferior to the best of which the community is capable. What that egoism is in its relation to other collective egoisms, we know and its ugliness is now being forced upon the vision and the conscience of mankind. The individual has usually something at least of a soul and the deficiences of the soul again by the fear of social opinion or, failing that, a fear of the communal law which he has ordinarily either to obey or at least to circumvent; and even the difficulty of circumventing is a check on all except the most violent or the most skilful. But the State is an entity which, with the greatest amount of power, is the least hampered by internal scruples or external checks. It has no soul ar only a rudimentary one. It is a military, political and economic being, but only in a slight and undeveloped degree an intellectual and ethical; and unfortunately the chief use it makes of its undeveloped intellect is to blunt by fictions, catchwords and recently by State philosophies, its ill-developed ethical conscience. Man within the community is now at least a half-civilised being; but his international existence is still primitive. Until recently the organised nation in its relations with other nations was only a huge beast of prey with appetites which sometimes slept when gorged or discouraged by events, but were always its chief reason for existence. Self-protection and self-expansion by the devouring of others were its *Dharma*. At the present day there is no essential improvement; there is only a greater difficulty in devouring. A "sacred egoism" is still the ideal fo nations, and therefore there is neither any true and enlightened consciousness of human opinion to restrain the predatory State nor any effective international law. There is only the fear of defeat and the fear, recently, of a disastrous economical disorganisation; but experience after experience has shown that these checks are really ineffective.

In its inner life this huge State egoism was once little better than in its outer relations. Brutal, rapacious, cunning, oppressive, intolerant of free action, free speech and opinion, even of freedom of conscience in religion, it preyed upon individuals and classes within as upon weaker nations outside. Only the necessity of keeping alive and rich and strong in a rough sort of way the community on which it lived, made its action partially and crudely beneficent. In modern times, there has been much improvement in spite of deterioration in certain directions. The State now feels necessity of justifying its existence by organising the general economic and animal well-being of the community and even of all individuals. It is beginning to see the necessity also of assuring the intellectual and, indirectly, the moral development of the whole community. This attempt of the State to grow into an intellectual and moral being is one of the most interesting phenomena of modern civilisation; even the necessity of intellectualising and moralising it in its external relations is being enforced upon the conscience of mankind by the present European catastrophe. But the claim of the State to absorb all free individual activities, a claim which it increasingly makes as it grows more clearly conscious of its new ideals and its possiblities, is, to say the least of it, premature and, if satisfied, will surely end in a check to human progress, a comfortably organised stagnancy such as overtook the Graeco-Roman world after the establishment of the Roman Empire.

The call of the State to the individual to immolate himself on its altar, to give up his free activities into an organised collective activity is therefore something quite different from the demand of our highest ideals. It amounts to the giving up of the present form of individual egoism into another, a collective form of itself, larger, but net superior, rather in many ways inferior to the bast individual egoism. The altruistic ideal, the discipline of self-sacrifice, the need of a growing solidarity with our fellows, of a growing collective social in humanity remain; but the loss of self in the State is not the thing that these high ideals mean, nor is it by any means the way to their fulfilment. Man must learn not to suppress and mutilate, but to fulfil himself in the fulfilment of mankind even as he must learn not to mutilate or destroy, but to complete his ego by expanding it out of its limitations and losing it in something greater which it now tries to represent. But the deglutition of the free individual by a huge State machine is quite another consummation. The State is a convenience, and a rather clumsy conveniance, for our common development; it ought never to be made an end in itself.

The second claim of the State idea that this supremacy and universal activity of the organised State machine is the best means of human progress, is also an exaggeration and a fiction. Man lives by the community, he needs it to develop himself individually as well as collectively. But is it true that a stage-governed action is the most capable of developing the individual perfectly as well as of serving the common ends of the community? It is not true. What is true is that it is capable of providing the co-operative action of the individuals in the community with necessary conveniences, of removing from it disabilities and obstacles which would otherwise interfere with its working. Here the real utility of the State ceases. The non-recognition of the possibilities of human co-operation was the weakness of English individualism; the turning of an utility for co-operative action into an excuse for rigid control by the State is the weakness of the Teutonic idea of collectivism. When the State attempts to take up the control of the co-operative action of the community, it condemns itself to create a monstrous machinery which will end by crushing out the freedom, initiative and serious growth of the human being.

தமிழ்ப் பாடம் 38.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[728-வது பக்கத் தொடர்ச்சி]

எற்றித் திரைபொரநொந் தேறி யிளமணலில்
பற்றிப் பவளம் படர்நிழற்கீழ்—முத்தீன்று
வெள்வளைத்தா யோடுநீர் வேலைத் திருநாடன்
புள்வளைத்தா னுடையாற் போந்து. 82.

பதப்பிரிவு:—எற்றி திரை பொர நொந்து ஏறி இள மணலில் பற்றி பவளம் படர் நிழல் கீழ் முத்து ஈன்று வெள் வளை தாய் ஓடும் நீர் வேலை திரு நாடன் புள் வளைத்தான் ஆடையால் போந்து.

அன்வயம்:-வெள் தாய்வளை; திரை எற்றிப் பொர, நொந்து, பவளம்பற்றி இளமணலில் ஏறி, படர்நிழல் கீழ் முத்து ஈன்று, ஓடும், நீர்வேலைத் திருநாடன் போந்து, ஆடையால் புள் வளைத்தான்.

பதவுரை.

வெள் - வெண்மையான
தாய்வளை - தாய்ச்சங்குகள்,
திரை - அலைகள்
எற்றி - தள்ளி
பொர - மோதுவதால்,
நொந்து - (அவை) வருந்தி,
பவளம் - பவளக்கொடிகளை
பற்றி - பிடித்துக்கொண்டு
இள - மெல்லிய
மணலில் - மணலுள்ள கரையில்
ஏறி - ஏறி,
படர் - (அப் பவளம்) படர்கின்ற
நிழல் - நிழலின்
கீழ் - கீழே
முத்து -(தாம் கருக்கொண்டிருந்த)முத்துக்களை
ஈன்று - பெற்றுவிட்டு
ஓடும் - ஓடிப்போகும்
நீர் - நீர்வளமிகுந்த
வேலை - கடலைச்சார்ந்த
திரு - அழகிய
நாடன் - நாட்டையுடைய நளன்,
போந்து - போய்
ஆடையால் - துணியினால்
புள் - அப்பறவையை
வளைத்தான் - சூழ்ந்துகொண்டான்.

விரிவுரை:-தமயந்தி பிடிக்கச்சொன்ன அழகுபோலிருக்கின்றது நளன் அப்பறவையைப் பிடிக்கப்போனதும். நிடதநாட்டு அரசனுக்குரிய செல்வம் எல்லாம் பெற்றிருந்த இவன் அவைகளை இழந்து மக்களையும் பிரிந்திருக்கும் இந்நிலையில் காட்டகத்தே தன் மனைவி சொற்கேட்டு அவள்வைத்து விளையாடுதற்கு, ஒற்றைத் துகில்கட்டிப் புள்வேட்டை ஆடிக்கொண்டிருந்த இக் காட்சி காணத்தக்கதே.

இவ்வாறு செய்கின்ற நளனை, நம் கவி, அவனுடைய நாட்டின் தன்மையைக் கூறிக் குறிக்கின்றார். கடலின் அலையால் மோதுண்ட சங்குகள் கரையிலேறித் தாம் வைத்துப் போற்றியிருந்த முத்துக்களை ஈன்று துறந்து போகின்ற நாட்டினையுடைய நளன், என்பதில் ஏதோ வோர் உள்ளுறையுவமம் அடங்கியிருப்பதுபோலத் தோன்றுகின்றது. உள்ளுறை உவமம் இன்னதென்பதை முன் 84-வது செய்யுளின்கீழ் (352-வது பக்கத்தில்) காட்டியிருக்கின்றோம். இங்கு இந்தச் செய்யுளில் இருக்கின்ற உள்ளுறை உவமம் எதுவென்று நிச்சயமாகத் தெரியவில்லை. கடலின் அலைகளால் எற்றுண்ட சங்குகள் தம்முடையசெல்வமாகிய முத்துக்களைத் துறந்து போவதேபோல் நளன் விதியால் மோதுண்டு தன்னுடைய செல்வங்களையெல்லாம் துறந்து போந்துளன், என்று நாட்டின் தன்மையை அவன்மேல் ஏற்றிப் புகழேந்திப்புலவர் இவ்வாறு கூறியிருப்பினும் இருக்கலாம்.

கூந்த லிளங்குயிலுங் கோமானுங் கொண்டணைத்த
பூந்துகில்கொண் டந்தரத்தே போய்நின்று—வேந்த
நன்னாடு தோற்பித்தா னேகா ணென்றதே [னே
பொன்னாடு மாநிறத்த புள். 83.

கருத்து:—புள்ளுருவாகத் தோன்றிய கலியின்மீது நளனும் தமயந்தியும் அத்துணியைக் கொண்டுபோய்ப் போர்த்திபவுடன் அப் பொற்புள் துணியோடு பறந்தேறி ஆகாயத்தில் நின்று, "வேந்தனே, உன் துணியை இப்பொழுது வஞ்சனையால் கவர்ந்த நானேதான் முன் உன்னுடைய நாட்டை நீ தோற்கும்படி செய்தவனும் ஆயினேன்," என்றான்.

காவிபோற் கண்ணிக்குங் கண்ணியந்தோட் காளைக்
ஆவிபோ லாடையுமொன் றானதே—பூவிரியக் [கும்
கள்வேட்டு வண்டுழலுங் கானத் திடைக்கனகப்
புள்வேட்டை யாதரித்த போது. 84.

பதப்பிரிவு:—காவிபோல் கண்ணிக்கும் கண்ணி அம் தோள் காளைக்கும் ஆவிபோல் ஆடையும் ஒன்று ஆனதுஏ பூ விரிய கள் வேட்டு வண்டு உழலும் கானத்துஇடை கனகம் புள் வேட்டை ஆதரித்த போது.

அன்வயம்:—பூவிரியக் கள்வேட்டு வண்டு உழலும் கானத்துஇடைக்கனகப்புள்வேட்டைஆதரித்தபோது, காவிபோல் கண்ணிக்கும் கண்ணி அம்தோள் காளைக்கும் ஆவிபோல் ஆடையும் ஒன்று ஆனதே.

பதவுரை.

பூ - மலர்கள்
விரிய - மலர்வதால் வரும்
கள் - தேனை
வேட்டு - விரும்பி
வண்டு - வண்டுகள் (தேன் கிடைக்காமையால்)
உழலும் - திரிகின்ற
கானத்து இடை - பாலைவனத்தில் (அவர்கள்)
புள் - பறவையைப் பிடிக்கும்
வேட்டை - வேட்டையை
ஆதரித்த - விரும்பின
போது - சமயத்தில்,
காவிபோல் - நீலோற்பலம் போல்கின்ற
கண்ணிக்கும் - கண்களையுடைய தமயந்திக்கும்
கண்ணி - பூமாலையை அணிந்த
அம் - அழகிய

188973

தோள் - தோள்களையுடைய
காளைக்கும் - இருஷபம்போன்ற நளனுக்கும்
ஆவிபோல் - அவர்களுடைய உயிரைப்போலவே
ஆடையும் - வஸ்திரமும்
ஒன்று - ஒன்றே
ஆனது - ஆய்விட்டது.

விரிவுரை:—நுண்ணிய நயமும் இனிமையும் வாய்ந்த செய்யுள்களில் இதுவொன்று. இவ்விருவரும் ஓருயிர் என்பதை நாம் முன்னரே அறிவோம். இப்பொழுது ஆடையும் ஒன்றாய்விட்டது. துன்பத்திலும் இன்பமுண்டு, தீமையிலும் நன்மையுண்டு; நஷ்டத்திலும் அதற்கீடானவொரு இலாபமும் உண்டு. ஆடைதானொன்று இழந்தாலென்ன! அதனால் உள்ளும் புறமும் ஒன்றாகும் நலம் இவர்களுக்கு வாய்த்ததே. வறுமையால் இவர்களது உறவு மேன்மேலும் மிகுகின்றதே யன்றி அகல்வதில்லை. ஏனையோரைப்போல் அல்லாமல் நளனும் தமயந்தியும் நல்குரவால் நெருங்குகின்றனர். இவர்களிருவருக்கும் ஆவி ஒன்றாயிருப்பதற்குச் சான்றாக இப்பொழுது ஆடையும் ஒன்றே ஆய்விட்டது.

பசையற வறண்டு வெப்பத்தால் வேகின்ற பாலைவனம் அது ஆதலால் அங்குச் செடியும் மலரும் இரா. ஒன்று இரண்டு கள்ளி முதலிய செடிகளின் அரும்புகளைக் கண்ட வண்டுகள் அவ்வரும்புகள் மலரக் காத்துக்கொண்டிருந்து, மலர்ந்தும் தேன் இல்லாததால் ஒன்றைவிட்டு ஒன்றிற்குத் திரிந்தலைகின்றன—என்னும் பொருள் "பூவிரியக் கள்வேட்டு வண்டு உழலும் கானம்'' என்ற வருணனையில் அடங்கி இருக்கின்றது.

குறிப்பு:—(1) ஆடையும், என்பதில் உள்ள உம் என்னும் இடைச்சொல், முன்னேயே ஆவி ஒன்றாயிருந்தது, ஆயினும் ஆடை ஒன்றாயிருந்ததில்லை; அதுவும் இப்பொழுது ஒன்றாயிற்று என்ற பொருளைத் தருவதால் இறந்தது தழுவிய எச்ச உம்மை.

ஆனதே, என்பதிலுள்ள ஏகார இடைச்சொல், நிச்சயமாக ஆய்விட்டது என்ற குறிப்பைக் கொண்டிருப்பதால் தேற்றப்பொருளில் வந்திருக்கின்றது.

(2) கண்ணி அம் தோள் காளை, என்ற வாக்கியம் கண்ணியை அணிந்த அழகிய தோள்களை உடைய காளை என்று விரியுமாகையால் கண்ணி அம், என்ற தொடரும், தோள் காளை என்ற தொடரும், இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்.

புள் வேட்டை - புள்ளைப் பிடிக்கின்ற வேட்டை, இது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

வேட்டை ஆதரித்தபோது - வேட்டையை ஆதரித்தபோது. இதனில் ஐ என்னும் உருபு மாத்திரந்தான் தோன்றாமல் இருக்கின்றது. ஆகையால் இரண்டாம் வேற்றுமைத் தொகை.

அறம்பிழைத்தார் பொய்த்தா ரருள்சிதைத்தார்மானத்
திறம்பிழைத்தார் தெய்வ மிகழ்ந்தார்—புறங்கடையில்
சென்றார் புகுநரகஞ் சேர்வாய்கொ லென்றழியா
நின்றாள் விதியை நினைந்து. 85.

பதவுரை.

அறம் - அறநெறியிலிருந்து
பிழைத்தார் - தவறினவர்கள்,
பொய்த்தார் - பொய்சொன்னவர்கள்,
அருள் - அருளை
சிதைத்தார் - கெடுத்தவர்கள்,
மானம் - மானத்தினுடைய
திறம் - பெருமையிலிருந்து
பிழைத்தார் - தவறினவர்கள்,
தெய்வம் - தெய்வத்தை
இகழ்ந்தார் - இகழ்ந்தவர்கள்
(ஆகிய இப்படிப்பட்ட கொடியவர்களுடைய)
புறம்கடையில் - (வீட்டு) வாயிற்படியில்
சென்றார் - சென்றவர்கள்
புகு - சேர்கின்ற
நரகம் - நரகத்தை
சேர்வாய் கொல்-நீ அடைய விரும்புகின்றாயோ,
என்று - என்று (தமயந்தி கலியைப் பார்த்துச் சொல்லி)
அழியா - மனங்கரைந்து
விதியை - விதிசெய்யும் கொடுமையை
நினைந்து - எண்ணி
நின்றாள் - நின்றாள்.

விரிவுரை:—ஆடையைக் கவர்ந்துகொண்டு அந்தரத்தே நின்று "நின்நன்னாடு தோர்பித்தோன் நானே காண்,'' என்ற கலியைநோக்கித் தமயந்தி கூறிய சொற்களை இச்செய்யுளில் காண்கின்றோம். "ஏ, எங்கள் நாட்டைத் தோற்பித்தோனே, பாபிகளும் பொய்யர்களும் குரூரநெஞ்சுடைய துரோகிகளும் மானமில்லாதவர்களும் தெய்வத்தை இகழ்கின்றவர்களும் வசிக்கின்ற வீட்டின் வாயிற்படியை மிதித்தவர்கள் அடைய வேண்டிய கொடிய நரகத்திற்கு நீ போக ஆசைப்பட்டோ, இவ்வாறு செய்தனை,'' என்று கலியை நொந்து பிறகு தன் விதியை நினைத்துச் சோர்வடைந்து தமயந்தி நின்றாள் என்பது இந்தச்செய்யுளின் பொருள். பாவிகள் பொய்யர் முதலாயினோர் வசிக்கின்றவீட்டின் வாயிற்படியை மிதித்தவர்களே கொடிய நரகம் சேர்வார்களென்றால் அப்பாவிகளுக்கும் பொய்யர்களுக்கும் துரோகிகளுக்கும் மானமில்லாக் கயவர்களுக்கும் தெய்வ நிந்தனைகள் செய்வோர்களுக்குமே உரியதாய் அமைக்கப்பட்டிருக்கின்ற நரகம் எத்தனை கொடியதாயிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டா. இத்தகைய தீயர்களின் வாயிற்படியை மிதித்தவர் என்றது, அவர்களோடு உறவுபாராட்டச் சென்றவர்களை மாத்திரமே குறிக்கும். ஆயினும், தீயோர் வசிக்குமிடம் என்று தெரியாமலும் அல்லது அவர்கள்பால் பகையாலேனுங்கூட அவர் மனைப்புறஞ் சென்றவர் நரகஞ் சேர்வார் என்று அச்சுறுத்துவதுபோல் இச் செய்யுளின் வாசகம் நிற்கின்றது. இதுவும், 'தீயாரைக் காண்பதுவுந் தீதே, என்னுங் கொள்கைக்கு இணங்கும். எனினும் இங்குக் கூறிய ஐவகைக் கயவர்களுக்குரிய நரகத்தின் கொடுமையையும், அவர்களால் பிறருக்கு விளையக்கூடிய தீமையின் அளவையும் காட்டுவதையே கவி மேற்கொண்டிருக்கின்றார்.

பிழைத்தார் பொய்த்தார் சிதைத்தார் பிழைத்தார் இகழ்ந்தார், என்னும் இச்சொற்கள் பிழைத்தவர் பொய்த்தவர்...என்ற பொருள் கொண்ட வினையாலணையும் பெயர்கள் ஆகும்(264-வது பக்கம்). இவைகளெல்லாம் தனித்தனி ஆறாம் வேற்றுமைத் தொகைகள். அறம் பிழைத்தாருடைய புறங்கடையிலும், பொய்த்தாருடைய புறங்கடையிலும், அருள் சிதைத்தாருடைய புறங்கடையிலும், மானத் திறம்பிழைத்தாருடைய புறங்கடையிலும், தெய்வமிகழ்ந்தார்களுடைய புறங்கடையிலும், (என்று தனித்தனியாகப் 'புறங்கடையில்' என்பதை ஒவ்வொன்றோடுஞ் சேர்த்துக் கொண்டு) சென்றார் (இதுவும் வினையாலணையும் பெயரே) புகுகின்ற நரகம், என்று முடித்துக்கொள்ள வேண்டும். ஆனால், அறம்பிழைத்தார் முதலிய ஐந்தையும் முதல்வேற்றுமையாகக் கொண்டு, புறங்கடையிற் சென்றார் என்பதையும் ஆறாவதாக வேறு இன்னொரு வகைத் தீயரைக் குறிக்கின்றதெனப் பொருள்படுத்தி இந்த ஆறு வகையினரும் போகின்ற நரகம் என்று முடித்துக் கொள்ளலாமோ எனவும் தோன்றலாம். எனின், 'புறங்கடையிற் சென்றார்'' என்பது யாரைக் குறிக்கின்றதென்னும் ஐயம் ஏற்படுகின்றது. புறங்கடை என்றால் வீட்டுவாயில், என்பது அர்த்தம். ஆயின் 'புறங்கடையில் சென்றார்' என்பதைத் தனியாக ஒருதிறத் தீயவரைக் குறிப்பதாகக் கொண்டால் யார்வீட்டு வாயிலிற்கு, எதற்காகச் சென்றவர் நரகம் புகவேண்டியவர் என்பது இந்தச் செய்யுளில் தெரியக் கிடக்கவில்லையே. ஆயினும், "அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை நின்றாரின் பேதையார் இல்'' என்ற திருக்குறளை மனத்திற்கொண்டு, "விபசார எண்ணத்தோடு பிறன்மனைவியைக் காதலித்து அவனுடைய வாயிலில் சென்று நின்றவர்கள்'' என்னும் பொருள் "புறங்கடையிற் சென்றார்'' என்பதற்குப் பொருந்தலாமே என நினைக்கலாம். எனினும் இது பொருந்தாதென்பதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. குறளில் இருப்பது பிறன்கடை, புறங்கடையன்று. பிறன்கடை யென்றால் பிறனுடைய வாயில் என ஆகுமாதலால், 'பிறனுடைய மனைவியை விழைந்து' என்று ஒருவாறு சொல்ல இயலும். இதுவும் இக்குறள் 'பிறனில் விழையாமை' என்னும் அதிகாரத்தில் வந்திருப்பது பற்றி அப்பொருள் ஏற்கின்றது. அதுவே 'இரவச்சம், என்னும் அதிகாரத்திற் காணுமானால், 'யாசகம் செய்யும்பொருட்டு இன்னொருவன் வாயிலை அடைந்தவன்' என்று பொருள்படுவதாகும். 'பிறன்கடை' என்பதே அதிகாரத்திற்கிணங்கிப் பொருள் மாறக்கூடியதாயிருக்க, இப்பாசுரத்தில் 'புறங்கடையில் சென்றார்' என்பதை வேறான ஒரு பாவமாகக் கொள்வதற்கு வேண்டிய ஆதாரம் அந்தச் சொற்களில் இல்லை. மேலும் விபசாரம் என்பதொன்று உண்டென்று மறந்தும் தமயந்தி தன் மனத்தில் நினைத்தாளென்பது நன்னயமுடைய பொருளாகாது.

சேர்வாய் கொல், என்று தமயந்தி கலிக்கு இரங்கி ஐயமெய்தியதாகக் கருதும் உரையே அவள் பிறப்பிற்கும் குணத்திற்கும் ஏற்றதாகும். "ஏ, கலியே, இவ்வாறு எமக்கு நீ தீங்கிழைக்க நினைத்தது என்னே! நாங்கள் உனக்கேனும் பிறர்க்கேனும் ஒரு தீமையும் செய்தறியேம். எங்களைக் கெடுக்கமுயல்வது உனக்குப் பெரும் பாவமாம். இப்பாவத்தை நீ எதற்காகப் பூண்டனை. நரகத்திற்குப் போகவேண்டும் என்னும் ஆசை உனக்கு வந்துற்றதோ! உற்றதாயின் அதற்கு வேறொன்றும்வழி அறியாமல் எங்களைத் துன்புறுத்தி அந்தப் பாவத்தினாலேனும் நீகொண்ட ஆசை நிறைவடைய வேண்டுமென்பது உன் நினைவோ!'' என்று தமயந்தியின் கருத்தை விரித்துரைக்கலாம். அவ்வாறின்றி, கொல், என்னும் இடைச்சொல்லை அசைநிலையாகக் கொண்டால் சேர்வாய் என்பது சேரக்கடவாய் எனப் பொருள்பட்டுத் தமயந்தி கலியைச் சபிப்பதுபோல் தோன்றும். மேன்மக்கள் தமக்குக் கஷ்டம் வந்து வருத்தும்போது தமது விதியை நினைத்து ஆறுவார்களே யல்லாது அவ்விதியை நடத்திவைக்கும் கருவியாயமைந்த மற்றவரை நோகார், சபிக்கவுஞ் சபியார். ஆதலாற்றான், "விதியை நினைந்து நின்றாள்'', என்று கவி நமக்கு நினைப்பூட்டுகின்றனர். இக்கருத்தை அடுத்தசெய்யுள் வெளிப்படையாக விளக்குகின்றது.

வையந் துயருழப்ப மாயம் பலசூழ்ந்து
தெய்வங் கெடுத்தாற் செயலுண்டோ-மெய்வகையே
சேர்ந்தருளி நின்றதனிச் செங்கோலா யிங்கொழியப்
போந்தருளு கென்றாள் புலர்ந்து.

கருத்து:—"மெய்ந்நெறி மாறாத வேந்தனே, தெய்வமேபுகுந்து நம்மைக் கெடுத்தால் நம்மா லதை விலக்கக் கூடுமோ? இனி இவ்விடம் விட்டுப் போவோம்'' என்றாள் தமயந்தி.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[726-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து 8-ம் தசகம்

6-ம் பாசுரம்.

செவிக ளாரநின் கீர்த்திக் கனியென்னுங்
கவிகளே காலப்பண் டேனுரைப்பத் துற்றுப்
புவியின்மேற் பொன்னெடுஞ் சக்கரத் துன்னையே
யவிவின்றி யாத ரிக்குமென தாவியே.

தலைக்கட்டுக் குறிப்பு:—அடுத்த 7-ம் பாசுரம் முதல் ஆழ்வார் தம்முடைய இந்திரியங்களின் குறைகளைப் பேசிமுடித்துத் தமது சொந்த ஆற்றாமையைப் பேசத் தொடங்குகின்றார். இப்பாசுரத்தில் தமது (ஆவி) பிராணவாயுவாகிய இந்திரியத்தின் குறையைக் கூறுகின்றார். செவிகள் ஆர, பகவத்விஷயத்தில் இன்பமான கவிகளைக் காலைமாலை முன்பொழுது பின்பொழுது முதலானகாலவிபாகத்துக்கு ஏற்பஇராகங்களுடன் இசைத்துப் பாடவே அவைகளின் மதுராஸம் புத்தியில் அமர்ந்து களிப்பூட்ட, பகவானை, இந்தப் பூமியில் சக்கரதாரியாய் வந்துதோன்றக் காணவேணுமென்று எனதாவி ஆசைப்படாநிற்கு மென்கின்றார். பகவானை, செவிகள் கண்கள் இவைகளோடுகூடிப் பஜிக்கவேண்டுமென்பது பிரார்த்தனை.

பதக்குறிப்புக்கள்:-காலப்பண்டேன்-காலோசிதமான ராகங்களான தேனுடன், உரைப்பத் துற்று-உலகவழக்கில் "உப்பு'' உரைத்தது "காரம் உரைத்தது'' என்ற விவகாரத்தைப்போல, இனிமையான பழரசமும் தேனும் சேர்ந்து, "உரைக்க"வேணு மென்கின்றார். அவி

வின்றி-இடையீடில்லாமல், ஆதரிக்கும்-நன்கு பாராட்டும், ஆசைப்படும்.

7-ம் பாசுரம்.

ஆவியே யாரமுதே யென்னை யாளுடைத்
தூவியம் புள்ளுடை யாய்சுடர் நேமியாய்
பாவியேன் நெஞ்சம் புலம்பப் பலகாலும்
கூவியும் காணப் பெறேனுன கோலமே.

தலைக்கட்டு:— இப் பாசுரத்தில் ஆழ்வார் தம் சுவயமனோபாவத்தையும் நிலைமையும் அருளிச்செய்கிறார். இப்பாசுரம் முதல்பாசுரம்போல் காணப்பட்டாலும் இரண்டு விஷயத்தில் விகற்பமுண்டு. "ஆவியே" "ஆரமுதே" என்றவிளிப்பதால், ஆழ்வாருடைய பிராணன் பகவத் சம்ஸ்லேஷம் (அதாவது அவன் கலப்பு) இல்லாவிடில் மரித்துப்போமாதலின் தன்பிராணரக்ஷணார்த்தம் உடனே பகவான் கெருடாருடராய் வரவேண்டுமென்று புலம்புகின்றார் என்பது தெரிகின்றது. இப்படிப் பிரார்த்தித்தும் வராமைப்பற்றி ஆழ்வார் நோவுபடுகிறார். முதல்பாசுரத்தின் உரையையும் பார்க்கவும்.

பதக்குறிப்புக்கள்:—தூவி அம் புள் - அம் தூவிப் புள் - அழகிய பக்ஷங்களை உடைய கெருட பகவான், கெருடபகவான் தன்னை ஆளாக உடையார் என்பதைக் குறிக்க "ஆளுடைய புள்" என்கிறார்.

8-ம் பாசுரம்.

கோலமே தாமரைக் கண்ணதோ ரஞ்சன
நீலமே நின்றெனதாவியை யீர்கின்ற
சீலமே சென்று செல்லாதன முன்னிலாங்
காலமே யுன்னை யெந்நாள் கண்டுகொள்வனே.

உரை:—"கோலமே, தாமரைக் கண்களையுடையதொரு அஞ்சன நீலமே! இப்படி இருந்துவைத்தும் என்னுடைய தாழ்வினைப் பாராட்டாமல் என்னெஞ்சத்தையே உனக்குவாஸஸ்தானமாகஇருத்தி நிரவதிக சௌசீலியத்தாலே யென்னை மிக மயக்குகின்றவனே? உன்னை எந்நாள்காண்பது, என்று சொல்ல, எம்பெருமானும் "காணக்கடவிய காலம் வந்தாலன்றோ, காணலாவது" என்றருளிச்செய்ய, "அக்காலம்தான் நீயிட்ட வழக்கன்றோ? ஆன பின்பு—இக்காலம் தன்னையே அந்தக் காணக்கடவிய காலம் ஆக்குவோம்" என்றால் ஆக்கமுடியாதோ வென்கிறார்."—ஆறாயிரப்படி.

பதக்குறிப்புக்கள்:—அஞ்சன நீலமே - கண்களுக்கு அஞ்சனத்தின் நீல ரூபமே, தாமரைக் கண்கள் நீலாஞ்சனத்தால் நீலரூபமாகவே தோற்றுகின்றனவென்பது திருவுள்ளம் போலும். சென்று செல்லாதன முன்னிலாங்காலம்:—சென்ற - இறந்த காலம், செல்லாதன-நிகழ்ந்து நடவாநின்ற காலம், முன்னிலாம் - முன்நிலாவும் எதிர்காலம்.

குறிப்பு:—"காலவித்தியாசத்தில் வரப்போவதை ஆழ்வாரே, நீர் எதிர்பார்க்க ஒண்ணாது" என்று பகவான் ஆக்ஷேபிக்கலாமென்று நினைத்து, அந்த ஆக்ஷேபத்திற்குப் பதிலாக "நீதானே அந்தக்காலத்துக்கும்நிர்வாஹகன். நாளைக்கு வரப்போகிறதை இப்போதே எய்தச்சொல்லஉன்னால்வொண்ணாதோ" என்றுவிண்ணப்பம் செய்கிறாரென்பது ஆறாயிரப்படி உரையின்நிர்வாஹம்.

9-ம் பாசுரம்.

கொள்வன்நான்மாவலி மூவடி தாவென்ற
கள்வனே கஞ்சனை வஞ்சித்து வாணனை
யுள்வன்மை தீரவோ ராயிரந் தோடுணித்த
புள்வல்லா யுன்னை யெஞ்ஞான்று பொருந்துவனே

பதக்குறிப்பு:—உள் வன்மை- தனக்குப் பரமசிவனையும் முருகக்கடவுளையும் அக்கினியையும் துணைவர்களாய்ப் பெற்று நிற்பதால் மனத்திற்கொண்ட செருக்கு, தீர-அடங்க, புள்வல்லாய்-யுத்தத்தில் கெருட ஆழ்வாரை வாஹனமாயுடைத்தாயிருந்து எதிரிகளை எதிர்த்தெங்கும் அவ்வாஹனத்தைக் கடாவி ஜெயிக்கவல்ல சாமர்த்தியமுள்ளவனே, பொருந்துவன் - ஸ்திரமாக அடையக் கடவேன். "கோலின காரியத்தை முடிக்கச் சாதனங்கள் எவையெவையென்று அறிகிறவனாய் அச்சாதனங்களைப் பயன்பட உபயோகிக்க வல்லவனாய் அவைகளின் உபயோகத்தால் ஆச்ரிதரின் விரோதிகளைப் போக்குமவனாய் ஆச்ரிதர்களுக்கு அவரவர் கோரும்பயனைச் சாதித்துக்கொடுப்பவனை நான் எஞ்ஞான்று கூடுவது.

குறிப்பு:—இந்திரனுக்கு அஷ்டலோகாதிபத்தியத்தைப் பலிசக்கரவர்த்தியினிடத்தில் மூவடியாசித்துத் திரும்பிக் கொடுத்ததை உரைக்கிறார். கஞ்சனை ஒரே பாய்ச்சலாய்பாய்ந்து மற்றவர் அவன் ஸஹாயத்துக்கு வரவொட்டாதபடி ஸம்ஹரித்ததைச் சாமர்த்தியமாக எடுத்து உரைத்தபடி. கெருட ஆழ்வார் மேல் ஏறிச் சக்கராயுதத்தால் வாணனது ஆயிரம் தோள்களைத் துணித்ததும் சாதன விமர்சன விவேகத்தைக் காட்டுகிறதென்று திருவுள்ளம்.

10-ம் பாசுரம்.

பொருந்திய மாமரு தினிடைப் போயவெம்
பெருந்தகா யுன்கழல் காணிய பேதுற்று
வருந்திநான் வாசக மாலைகொண் டுன்னையே
இருந்திருந் தெத்தனை காலம் புலம்புவனே.

பதக் குறிப்புக்கள்:—பொருந்திய - நெருங்கி ஒன்றோடொன்று இணைந்து வளர்ந்திருந்த, மா மருதிடை - இரண்டு மருதமரத்தின் நடுவே, போய - உள் புகுந்து அவற்றைத்தாண்டி அவைகள் தமக்கு யாதொரு தீங்குமில்லாமல் கீழே வீழ்த்திய, எம்-என்னுடைய, பெருந்தகாய் - என்னை ரக்ஷித்தருளினவனே, (மரங்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் துன்புறுத்தி யிருந்தால் ஆழ்வார் உளராகமாட்டாரென்பது திருவுள்ளம்) உன் கழல் காண - உன் திருவடிகளைத் தரிசிக்க, பேதுற்று-மோஹப்பட்டு அதியாசைபட்டு, இருந்திருந்து - சிறிது காலம் ஜீவித்திருந்து, வருந்தி - மனவியாகுலப்பட்டு, நான், - உன்னைவிட்டுப் பிரிந்திருக்கவல்லவன் அல்லாத நான், வாசகமாலைகொண்டு-பாட்டுக்கள்சேர்த்துப்பாடி, உன்னையே - ஆச்ரிதரோடுகலக்க உதவிபுரியும் உன்னை நினைத்து நினைத்து, எத்தனை காலம் புலம்புவன் - வாய்விட்டு விளிப்பேன். உன்குணங்களை எடுத்துரைத்துக்கொண்டு எத்தனை காலம் நான் அலற்றும்படி செய்யப்போகிறாயென்று ஆழ்வார் குறைபடுகின்றார்.

11-ம் பாசுரம்.

புலம்புசீர்ப் பூமி யளந்த பெருமானை
நலங்கொள்சீர் நன்குரு கூர்ச்சட கோபன்சொல்
வலங்கொண்ட வாயிரத் துளிவையு மோர்பத்
திலங்குவான் யாவரு மேறுவர் சொன்னாலே

எல்லாராலேயும் எத்தனை காலமும் எத்தினாலும் முடிவுகாணாத கல்யாணகுணங்களை யுடையனாயிருந்து பூமியையளந்த எம்பெருமானை அவனது குணங்

களையே தாரகமாய்ப் போற்றி ஜீவித்திருக்கும் நன்குருகூர்ச் சடகோபன் சொன்னவித் திருவாய்மொழியைச் சொன்னார் எல்லாரும் பிரகாசமாய் ஜவலிக்கின்ற திருநாட்டிலே ஏறப்புகுவார்.

விசேஷக் குறிப்பு:—யாம் இத்தசகத்தில் காணக்கிடக்கும் வரையறுப்புக்குள் அகப்படாததும் உணர்வதற்கு அருமையும் ஆன ஆழ்வாரின் திருவுள்ள அபிப்பிராயங்களை ஒருவாறு சமரசப்படுத்த முயன்றுளோம். ஆயினும், ஒரு கரணம் தனது விருத்தியை விட்டு மற்றொரு கரணத்தின் விருத்தியை ஆசைப்படுவது (அதாவது கைகள் நவநீத சோரத்தைக்காணவேண்டுமென்பது) எவ்வண்ணம் சாதிக்க வல்லது? ஆகவே இந்த எட்டாம் தசகத்தின் ஸாரம்—பக்தர்களின் மனது ஆவி இந்திரியங்கள் எல்லாவற்றையும் பகவானது அழகு தன்வயப்படுத்திக் கிரமாக்கிரமமில்லாதே ஒன்றின் நுகர்ச்சியை மற்றொன்றுவலிக்கவும் தனியாயும் கும்பலாயும் அதிசபலராய் அலறி அழப்பண்ணும் கலியாண குணங்கள் நிறைந்த எம்பெருமானை ஸர்வகாலமும் காணவேண்டுமென்ற ஆசையை உண்டுபண்ண அவனது திவ்விய மங்கள விக்கிரஹத்துக்குச் சுபாவமென்பதை ஆழ்வார் ஓதியருளினார்.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[731-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 4 களம் 3.

[லூஸியஸ் மேலங்கியைக் கொண்டுவருகின்றான்]

ப்ரூட்டஸ்:—அங்கியைக்கொடு. உன் கருவி எங்குளது? (1)

லூஸியஸ்:—இங்கு, இக்கூடாரத்தில். (2)

ப்ரூட்டஸ்:—என்ன! உறக்க மயக்கமுடன் உரையாடுகின்றாய் நீ. (3) பாவம், மைந்த (4) உன்மீது குற்றமில்லை; நெடிது நீ விழித்திருக்கலாயினை. க்ளாடியஸ்ஸையும் எனது ஆட்களில் மற்றுஞ் சிலரையும் கூப்பிடு. என் கூடாரத்தின்கண் அணைகளின்மீது அவர் நித்திரைசெய்யவேண்டுகின்றேன்.

லூஸியஸ்:—வார்ரோ! க்ளாடியஸ்! (5)

[கூப்பிடுகின்றான்.]

[வார்ரோவும் க்ளாடியஸூம் வருகின்றனர்]

வார்ரோ:—அழைத்தனையோ, எம் தலைவ?

ப்ரூட்டஸ்:—என் கூடாரத்தினுள் படுத்து நீங்கள் நித்திரைசெய்யுங்கள். சிறிதுபொறுத்து, என்மைத்துனன் காஸ்ஸியஸ்ஸின்பால் கருமமாக நானுங்களை எழுப்பவேண்டியிருக்கலாம். (6)

வார்ரோ:—பணி யீதுவாயின், நாங்கள் நின்றவண்ணமே உன் சித்தத்திற்குக் காத்திருப்போம்.

ப்ரூட்டஸ்:—அவ்வாறு வேண்டேன். படுத்துக்கொள்ளுங்கள். நான் வேறு நினைக்கநேரினும் நேரலாம். (7) பார், லூஸியஸ் நான் அவ்வளவு தேடிய புத்தகம் இங்கு இருக்கின்றது. என் அங்கியின் பையில் அதனை வைத்துவிட்டேன்.

[வார்ரோவும் க்ளாடியஸூம் படுக்கின்றனர்]

லூஸியஸ்:—அதனை நீ என்கையில் கொடுத்ததில்லை. என்றது எனக்கு நிச்சயம்.

ப்ரூட்டஸ்:—நல்லவன் நீ மைந்தா, என்னைப் பொறுத்துக்கொள். மறதியே அதிகம் உடையவனாயிருக்கின்றேன். (8)பாரமுடைய நின் கண்களைச் சற்றே தாங்கிப் பண்கள் ஒன்றிரண்டு உன்கருவியிற்றொட வல்லையோ? (9)

லூஸியஸ்:—பெரும, விருப்பம் அதுவாயின், செய்கின்றேன்.

ப்ரூட்டஸ்:—ஆம், மைந்த. உன்னை யான் மிகமிக வருத்துகின்றேன்; எனினும், நீ இசைகின்றாய்.

லூஸியஸ்:—என் கடமை அது, ஐய.

(1) கருவி - யாழ். இங்குப் பொதுவாக இசைக் கருவியைக் குறிக்கின்றது.

(2) இக்கூடாரத்திலேயே இருக்கின்றது, என முடியும்.

(3) லூஸியஸின் பேச்சுத் தெளிவின்றி அவன் தூக்க மயக்கம் உடையவனா யிருக்கின்றான் என்பதைக் காட்டுகின்றது.

(4) மைந்த, மைந்த, என்று லூஸியஸ்ஸை ப்ரூட்டஸ் அருமையாய் அழைப்பது அவனுடைய இளகிய மனத்தையும் நல்ல குணத்தையும் காட்டுகின்றதெனச் சில ஷேக்ஸ்பியர் நூலாராய்ச்சியாளர் எடுத்துக்காட்டுவார்.

(5) வார்ரோவும், க்ளாடியஸூம் ப்ரூட்டஸின் பணியாளர்கள்.

(6) வார்ரோவையும் க்ளாடியஸ்ஸையும் தன்னுடன் கூடாரத்தில் படுத்துக்கொள்ளச் சொல்கின்றான் ப்ரூட்டஸ். தன்னையும் அறியாமல் ஏதோவொரு காரணத்தால் ப்ரூட்டஸ் அன்றிரவு தன் கூடாரத்தில் தனியே யிருக்கப் பயந்தவனாகித் தனக்குத் துணையாகும்படி இவர்களை அங்குப்படுத்துக்கொள்ளச் சொல்கின்றான் என்று ஊகிக்கவேண்டியிருக்கின்றது. ஆயினும் அதனை மறைத்து, இரவில் ஏதேனும் கருமமாய் அவர்களைக் காஸ்ஸியஸ்ஸின்பால் அனுப்பவேண்டிவரலாமென்பதாகக் காரணங் கூறுகின்றான். ஒன்று இங்கு உணர்தற்குரியது. "நீங்கள் இங்கே இன்றுபடுத்துக் கொள்ளுங்கள்" என்று தன் பணியாளர்களுக்குக் கட்டளை இட்டாலேபோதும், அதற்குக் காரணம் ஒன்று கூறவேண்டும் என்னும்அவசியம் இல்லை. அவசியம் இல்லாதவிடத்துக் காரணம் ஒன்று கூறப்படுமாயின் பெரும்பாலும் அது நிசமன்று என்பதற்கு ஓர் இரகசியஅறிகுறியாகும். மேலும், காஸ்ஸியஸ்ஸிற்குச் செய்திசொல்லி யனுப்புவதற்காயின், ஒருவன் உடன்இருந்தால் போதுமே.

(7) நீங்கள் வீணாக விழித்துக்கொண்டிருக்க வேண்டா; காஸ்ஸியஸ்ஸிற்கு ஒன்றும் நான் செய்திசொல்லி யனுப்பாமலே இருந்துவிட்டாலும் இருந்துவிடலாம்—என்பது பொருள். இதுவும் அவன்சொன்ன காரணம் நிசமன்று என்று நாம் நினைப்பதற்கு ஆதாரமாகின்றது.

(8) ப்ரூட்டஸ்முன்படித்துக்கொண்டிருந்தபுத்தகத்தைத் தன் சட்டைப் பையிலேயே வைத்துவிட்டு, அதனை மறந்து தேடித்தேடி, அப்புத்தகத்தை லூஸியஸின்கையில்கொடுத்தானென்றும், லூஸியஸ்தான் எவ்விடத்திலேயோ கைய

ப்ரூட்டஸ்:—உன் சக்தியையுங் கடந்து நானுனது கடமையைச் செலுத்தலாகாது. (10) இள இரத்தம், இளைப்பாறும் வேளையை எதிர்நோக்குகின்றதென்ப தறிவேன். (11)

லூஸியஸ்:— என் பெரும, முன்னரே யான் துயில் செய்தாகிவிட்டது.

ப்ரூட்டஸ்:—நன்று செய்தனை, மீண்டும் நீ துயில் செய்யலாம்; நீண்டநேரம் நின்னை யான் நிறுத்தமாட்டேன். நான் உயிருடன் மாத்திரம் இருப்பேனாயின் நினக்கு நல்லனாயிருப்பேன். (12)

[லூஷியஸ் கருவியை இசைத்துப் பாடுகின்றான்]

துயிலும் சுரம் இது:—(13) ஓ கொலைகார உறக்கமே! நினக்கு இசைபாடும் என் மைந்தன்மீது உன் ஈயத்தண்டினை வைக்கின்றனையோ (14)?-மெல்லியல் கள்வ, நினக்கு நல்லிரவாகுக; (15) நின்னை எழுப்புமளவு பிழையும் யானுனக் கிழைக்கமாட்டேன். நின் தலையை யசைத்தால் உன் இசைக்கருவியை உடைப்பாய்; நின்னின் றதனை அகற்றிவிடுவேன். நல்லவென் மைந்த, நல்லிரவாகுக - பார்ப்போம், பார்ப்போம்-நான் படித்து நிறுத்திய இடத்தில் இதழை மடித்திருக்கவில்லையா? இங்கேயிருக்கின்றதென நினைக்கின்றேன். (16)

[ஸீஸரின் ஆவிஉருவம் வருகின்றது]

எத்துணை ஒளிகெட்டு இவ்விளக்கு எரிகின்றது.!—ஹா! யாரோ வருவது இங்கு? இவ்வெருவருதோற்றத்தை என் கண்களின் நொய்ம்மையே உருச்செய்கின்றதென் றெண்ணுகின்றேன். (17) என் மீது வருகின்றதே. ஆவாயோ யாதேனும் நீ? என் உதிரம் உறையவும் உரோமம் நெறிக்கவும் செய்கின்ற நீ ஒரு தேவனோ தேவதூதனோ, மற்றோர் பேய்தானோ, யாதோ வெனக்குப் பகர்.

ஆவியுருவம்:—உன் துஷ்டதேவதை,ப்ரூட்டஸ். (18)

ப்ரூட்டஸ்:— ஏன் வருகின்றாய் நீ?

ஆவியுருவம்:—பிலிப்பையில் என்னை நீ காண்பாயென்பதை உனக்கு உரைப்பதற்கு.

ப்ரூட்டஸ்:—நன்று; எனின், நானுன்னை மீண்டும் காண்பேனோ?

ஆவியுருவம்:—ஆம், பிலிப்பையில்.

ப்ரூட்டஸ்:—ஆயின், உன்னை யான் பிலிப்பையில் காண்பேன், (19.)

[உருவம் மறைகின்றது]

இதோ, இதயந் துணிந்தேன், நீயும் மறைந்தனை. துஷ்டதேவதையே, நானின்னும் உன்னுடன் உரையாடியிருப்பேன்—மைந்தா! லூஸியஸ்! வார்ரோ! க்ளாடியஸ்! ஐயா! எழுந்திருங்கள்.

லூஸியஸ்:—இந்நரம்புகள்,என் பெரும, பொய்க்கின்றன (20.)

ப்ரூட்டஸ்:—இன்னும் தன் கருவியை இசைத்துக் கொண்டிருப்பதாக எண்ணுகிறான் இவன்—லூஸியஸ், எழுந்திரு!

லூஸியஸ்:—என் பெரும!

ப்ரூட்டஸ்:—கனாக்கண்டனையோ, லூஸியஸ், இப்படிநீ வாய்விட்டு அலறினையே?

லூஸியஸ்:—பெரும, யான் அலறினேன் என்று அறியேன்.

ப்ரூட்டஸ்:—ஆம், அலறினாய். ஏதேனுங் கண்டனையோ நீ?

லூஸியஸ்:—ஒன்றுங் கண்டிலேன், என் பெரும.

ப்ரூட்டஸ்:—மறுபடி துயில்கொள்; லூஸியஸ்—ஏடா க்ளாடியஸ்! (வார்ரோவுக்கு) ஏடா, ஏ! எழுந்திரு!

யர்ந்து வைத்துவிட்டானென்றும் அவனைச் சிறிது கடிந்து முன்னர்ப் பேசியிருக்கவேண்டுமென்பது இதனால் தெரிகின்றது. அதனைக் குறித்து இப்பொழுது மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றான்.

(9) தூக்கத்தின் பாரத்தால் உன் கண்கள் மூடிக்கொள்ளாமல் காத்து, (சற்றேவிழித்திருந்து) இரண்டொருபண்கள் உன் வாச்சியத்தில் நீ வாசிக்கவேண்டுமென்று விரும்புகின்றேன்—என்பது பொருள்.

(10) நான் இட்ட பணியை நீ செய்யவேண்டும் என்ற கடமை யுனக்கு இருப்பதாலேயே, உன் சத்தியைக் கடந்து நீ எனக்குப் பணிசெய்யவேண்டுமென்று வற்புறுத்தமாட்டேன்—என்பது பொருள்.

(11) இளைஞர், உறங்காமல் கண்விழித்திருக்க வல்லவரல்லர்—என்பது பொருள்.

(12) தான் இனிப்பிழைத்திருப்பது அரிது என்னுமோர் அச்சம் ப்ரூட்டஸின் மனத்தில் வருத்துகின்றது. ஸீஸரைக் கொன்று வீழ்த்திய அக்கணமே ப்ரூடஸ்ஸின் மனம் தளர்ந்துவிட்டதென்பதை, மூன்றாம் அங்கம், முதல் களத்திலேயே அவன் பேசுவதினின்று அறிந்துகொள்ளலாம்.

(13) துயிலும் சுரம் - துயில் வரும்படி செய்யும் பண்.

(14) தூக்கம் வரும்போது கண் ஈயம்போல் ஒளிமழுங்குகின்றதாதலால், உறக்கம் என்பது தனது ஆட்சியைச் செலுத்த ஓச்சும் தண்டு (கதை), ஈயத்தண்டு என்று உரைக்கப்பட்டது. 'உறக்கமே, நீயோர் இரக்கமற்ற கொலைகாரன், ஏனெனில் உனக்குரிய இசையையே பாடுகின்ற இவனை நீ ஒழித்துவிட்டனையே''—என்பது பொருள். லூஷியஸ் பாடத்துவக்கியவுடன் கண்ணயர்ந்துவிட்டான்.

(15) இது, தூங்கிவிட்ட லூஷியஸை நோக்கி அருமையுடன் ப்ரூட்டஸ் கூறியது.

(16) லூஷியஸ் தூங்கியவுடன், ப்ரூட்டஸ் புத்தகத்தைப் பிரித்து முன் விட்டஇடத்திலிருந்து படிக்கப்புகுகின்றான்.

(17) விளக்கொளி மங்குவதாகக் காண்கின்றான் ப்ரூட்டஸ். உடனே, ஸீஸரின் ஆவியுருவம் தோன்றுகின்றது. அத்தோற்றம் இன்னதென்று அவனுக்கு விளங்கவில்லை. முதலில், வருவதுபோன்று காணுமது, கண்ணின் மருட்கையாகிய வோர் பொய்த்தோற்றந்தானே என்று எண்ணுமளவில், அது அவனிடம் நெருங்கவே, 'யாது நீ' என்று வினவுகின்றான். இப்படிப் பால்வழுவிப் பேசும் இதன் அமைதியின் அழகைச் சிந்தித்து அறிந்துகொள்ளவேண்டும்.

(18) நன்மை செய்ய ஓர் இஷ்டதேவதையும், தீமை செய்ய ஓர் துஷ்டதேவதையும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி இருக்கும். ப்ரூட்டஸின் துஷ்ட தேவதையே தான் என்று சொல்கின்றது அவ்வுருவம். அவரவர் செய்த தீவினையே அவர்வர் துஷ்டதேவதையாய் வந்துதோன்றும் என்னுந் தத்துவத்தை இதனில் நன்கு காணலாம்.

(19) ப்ரூட்டஸ் பயம்நீங்கி, "உன்னை நான் பிலிப்பையில் காண்பேன் என்பது தெரிகின்றது'' என்ன உடலுங் குரலும் நடுங்காமல் சாதாரணமாய்ச் சொல்லுமளவில், உருவம் மறைந்துவிடுகின்றது.

வந்தவுருவம் உண்மையில் புறத்திருந்ததோ அல்லது ப்ரூட்டஸின் பிரமையேதானோ என்னும் ஐயம் எஞ்சும்படி ஷேக்ஸ்பியர் இந்தக் களத்தை அமைத்திருக்கின்றார்.

குறிப்பு:—ப்ரூட்டஸின் மனம் பிதிர்ந்துகிடக்கின்றது. நிகழ்ந்தன வெல்லாம் நினைத்து "எற்றுக்கோ ஸீஸரைக் கொன்றேன்'' என்ற ஏசறவு கொண்டிருப்பான். அப்பழி

வார்ரோ:—என் பெரும!

க்ளாடியஸ்:—என் பெரும?

ப்ரூட்டஸ்:—ஏனையா, தூக்கத்தில் அப்படி அலறினீர்கள்.

வார்ரோ, க்ளாடியஸ்:—பெரும, அலறினோமோ யாம்?

ப்ரூட்டஸ்:—ஆம். ஏதேனும் கண்டீரோ, நீங்கள்?(21)

வார்ரோ:—இல்லையே, பெரும, நான் யாதுங் கண்டிலேன்.

க்ளாடியஸ்:—பெரும, நானுங்கண்டிலேன்.

ப்ரூட்டஸ்:—போய், என் மைத்துனன் காஸ்ஸியஸிற்கு எனது வந்தனையை இயம்பி, பொழுதுடன் முன்னாக அவன் சேனையைத் செலுத்திப் போம்படி சொல்லுங்கள். நாம் பின்னர்த் தொடர்ந்து வருவோம்.

வார்ரோ, க்ளாடியஸ்:— பெரும, அப்படியே செய்யப்படும்.

[போகின்றனர்]

வீண்போகாது என்ற அச்சமும் அவனை உறுத்தத் தலைப்பட்டிருக்கும். அச்சமயத்தில், ஸீஸரின் ஆவிஉருவமும் தோன்றி "நின் துஷ்டதேவதை நான்'' என்று விளம்பியவுடன், இனி எல்லாம் ஒழிந்தது என்னும் ஓர் கையறவினால், ஒருவாறு மனந்துணிந்து, "சரி, உன்னைச் சந்தித்தால் சந்திக்கின்றேன், அதனாலென்ன?'' என்று எதிர் பேசிவிட்டான் எனக்கொள்ளல் வேண்டும்.

(20) பொய்க்கின்றன—என்பது, சுருதி பிழைத்து அபசுவரம் பேசுகின்றன, என்பது பொருள். இது துயில்மயக்கத்தால் உரைத்த வார்த்தை. அவன் கையில் இப்பொழுது கருவி யில்லை.

(21) அலமந்த ப்ரூட்டஸ் தனியே யிருப்பதற்கு அஞ்சி இவர்களை எழுப்புகின்றான். அதுவுமன்றி, தான் கண்ட தோற்றத்தை அவர்களும் கண்டனரோ என்பதை அறியும் ஆவலும் உடையன். எனினும், அவர்கள் எல்லாரும் தூக்கத்தில் அலறினர்களென்றும், அதன்பொருட்டே தான் அவர்களை எழுப்பினான் என்றும் கற்பித்துக் கூறித் தன் உண்மைநிலையை மறைக்கின்றான்.

நான்காம் அங்கம் முற்றிற்று.

பொதிகை நிகண்டு

[733-வது பக்கத் தொடர்ச்சி]

துடர்துவக்குச் சங்கிலியா மிடங்கணியு மதற்காந்
துடர்நிகளம் †பிணைதளையு மிடங்கணியும் விலங்கா
*மிடலாணி யூசிகண்ட மூன்றெழுத்தா ணியின்பேர்
விடுபடை யத்திரமாம் விடாப்படைசத் திரமாம்
படைகருவி தானைகடு முட்சுதனங் கழுமுட்
படைக்கலமெஃ கேதிதுப்பு வேறுமா யுதப்பேர்
வடிநிசிவை பூவயிர்வா ளயின்முனைமுட் கூர்மை
வசியுமா நுதிநுனியாங் கடறுபுட்டி லுறையே. 241.

உறழ்பலகை கடந்தகட்டங் கிடுகுசே டகந்தோ
§லுரிச்சிராய் வட்டணங்கட் டியம்வட்டந் தட்டு
மறைபரிசை வேதிகைதோற் பரமுங்கே டகப்பேர்
வன்கோதை கைப்புடைகைக் கட்டியின்பேர் சிரகம்
பறிவில்கீ சகந்தலைக் கிராணப்பேர் பருமம்
பரம்பரண மெய்யுறை சடாரிகச்சை கண்ட
மிறுகியசா லிகையரண மேடகங்கந் தளமா
சீராறுங் கவசப்பே ரெனுங்கரிய குழலே. 242.

கரிமுக படாஞ்சூழி மைந்தனமாம் புரசை
கவடுகச்சை தூசானைக் கழுத்திலிடு கயிறும்
பரியபில கடம்பலகா ரங்கரிமேற் றவிசாம்
பல்லணம்பண் படைபருமம் பாம்பரிக்கல் லணையாம்
புரவிவாய் வடம்வற்கம் வடிகயிறு குசையாம்
பொற்கடியா லங்கவினங் கறுள்கலின மூட்டாம்
வரிசையங்க வடிமொட்டுப் படிகச்ச மாகும்
மத்திகைகோல் சம்மட்டி யாமுளைகே சரியே. 243.

கேசரப்பிஞ் ஞகமொன்றுந் தலைக்கோலப் பேராங்
கிரீடஞ்சே கரஞ்சுடிகை முடிமௌலி மோலி
மாசில்சூ டிகையேழு மகுடப்பேர் மகுட
மாலிகை கரோடியதா முடியுறுப்பு மகுடம்
ஆசில்கோ டகம்பதுமங் கிம்புரிதா மமுமாம்
ஆரமுங்கண் டிகைமதா ணியும்பதக்க மாகுந்
தேசுறுகன் னுவதங்கஞ் செவிமலர்ப்பே ருத்தி
திருவார்தொய் யகந்தலைப்பா ளையின்பேர்புல் லினவே.

† புணைதளையு (பி-ம்)
* மிடரேணி (பி-ம்)
§ லுருச்சிராய் (பி-ம்)

புல்லகஞ்சூட் டிலம்பகமு நுதலணியாஞ் சுட்டி
புலன்சுடிகை யாமோடைப் பட்டமதாங் குழைப்பேர்
சல்லிமிரி சிகையொடுகுண் டலமாகுந் *தூம்பு
தாடங்கந் தோடாம்வல் லிகைகுணுக்குக் கொட்டை
வல்லகடிப் பிணைகம்பி கடுவடங்கா தணியாம்
வாகுவலை யத்தின்பே ரங்கதங்கே யூரம்
நல்லதோ ளணியாங்கங் கணந்தொடிகண் டிகையே
நற்கடக மாம்பூணூ லுபவீதம் பிடியே. 245.

பிடிகஞ்சு டகஞ்சங்கு வளைகுருகு கன்று
பெறுவண்டு தொடிசரியொன் பானும்வளை யலின்பேர்
படியின்மிலைச் சினைவீக மாழிமோ திரமும்
பவுத்திரமும் விரலணியாஞ் சரமாரந் தாமம்
வடமொடுகோழ் சரப்பணிப்பேர் சரிமணி கலாபம்
மனவுதோ ரையுமரைப்பட் டிகைப்பேர்மே கலையே
விடுகாஞ்சி யேகலா பந்தாமம் பதுமம்
விரிசிகையு மணிக்கோவை யாமரைமே லணியே.246.

அரைஞாணே யிரதனங்கிண் கிணிசதங்கை கழலே
யாணணிபா டகம்பாத கடகமொவ்வோர் பேராம்
பரிபுரநூ புரமரவங் குடச்சூலே ஞெகிழி
பரலினரி யகஞ்சிலம்பாம் பரலரியாம் பாத
சரமதின்பேர் பாதசா லந்தான்பூ ணாரஞ்
சங்கிலி மதாணிநகை வள்ளிகலன் பண்டங்
கருதுபணி யிழையணியா பரணம்பூ டணப்பேர்
கயின்மடையே கடைப்பூணு மயிலனைய நிதியே. 247.

†நிதிசெய்கத லிகைதூக்கந் தொங்கலின்பேர் தூங்கி
நெறிவயிரங் கோளகைகிம் புரிப்பூணென் றாகுங்
கொதிதளிகை வள்ளம்பா சனந்தட்டஞ் சக்கங்
கோரந்தா லங்கலமும் வட்டிலின்பேர் கிண்ணந்
திதிகைநா ழிகைவட்டிற் கண்ணலுமாந் தறுவி
சிலகமுஞ்சட் டுவப்பேர்நெய் விடுஞ்சுருவை சுருக்கா
முதிபடிக்கம் படியகமா மிந்தளமே தூப
மூட்டிதட வென்பதுமாங் கண்டைமணி யாமே. 248.

* தூம்பு (பி-ம்)
† நியமத (பி-ம்)

கண்டைபட விகைபரந்த கைமணியாம் பாண்டில்
கஞ்சமுங்கிட் டியுந்தாள மெறிமணிசே கண்டி
தெண்டிகோ டிகங்கடப மாம்பாணி கோயாங்
*கேள்கரகங் கரண்டகங்குண் டிகைகமண்ட லப்பேர்
கொண்டசின்னம் பீலியாங் காளங்கா களமாங்
கோடிரலை யாம்பல்வயிர் கொம்பாகும் பணவங்
திண்டியா னகம்படக மாமிடக்கை யாமங்
திரிகைகுளிர் முழவமாங் கடிப்பின்பேர் குணிலே 249.

குணில்படுமோர் கட்பறைப்பேர் பதலைமொந்தை யாகுங்
குடப்பறையன் றிப்பறையாஞ் சகண்டமுர சாகுந்
திணியதக்கை சல்லரிதண் ணுமையொடு நிசாளந்
திமிலைபம்பை யாநந்தி துந்துமிபே ரிகையாங் [யாங்
துணிவின்முரு கியந்துடிதொண் டகங்குறிஞ்சிப் பறை
துடிபாலைக் காம்பம்பை கோட்பறைமுல் லைக்காங்
கிணைமருதப் பறைநெய்தற் பறைப்பேர்சா பறையாங்
கிரிக்கரடிப் பறைதட்டை சிறுபறையா குளியே. 250.

குழிமுழவம் பதலைகடிப் பறைபகுவாய் தவிலாங் [யா
கொடுந்துடிதண் ணுமையுடுக்காம் பரினமண்மாற் சனை
முழவுதிண்டி முருடுதக்கை பேரிடம்பை பீலி
முரசுதகு ணிதந்தண்ணந் துந்துமி தடாரி
கழிவில்கோ டணையியமே பணையம்வாத் தியப்பேர்
கவிப்பாத பத்திரஞ்சத் திரங்கவிகை தொங்கல்
அழிவில்பிச்சங் குடையின்பேர் கால்செய்வட்ட முக்க
மாலவட்டந் தாலவிருந் தமுமாஞ்சிற் றிடையே. 251.

சிற்றால வட்டம்வீ சனம்பீலி விசிறி
சிறியசாந் தாற்றியுமாங் கோடிகம்பூத் தட்டாங்
கற்றூய்பீ டிகைகடிப்புக் கோடிகந் துமாணம்
கண்டிகைகாண் டமும்பூண்கொள் கலமாமம் மானை
பற்றூரம் மனையின்பேர் கந்துகமே பந்தாம்
பந்துமட்டத் துருத்திபெருந் தாரைசிறு தாரை
வற்றூத சிவிறியுமாஞ் சீப்பின்பேர் சிக்கம்
மயிர்வாரி கங்கமுமா மாரைபா யினுக்கே. 252.

பாதங்காப் புக்கழறேல் செருப்புப்பா துகைப்பேர்
பாவன்மிதி யடியாகு மதிற்கொட்டை கொடையாங்
கோதுஞ்சா ணந்தோட்டி யங்குசந் துறேட்டி
கோணமே கசப்பகையின் பேரடைபட் டடையா
மோதுங்கூ டத்தின்பேர் சம்மட்டி குறடு
முருடுசுட்டுக் கொல்லுலையா ணக்கோலாங் கோளென்
றேதும்பேர் கொழுவாமின் றூரடும் பண்ட
மோரையா முலைத்துருத்தி யுதியோடத் திரியே. 253.

அத்துசிவை குருகிரண்டுங் கொல்லுலைமூக் காகு
மாரிதொட்டி *புதவுகபா டங்காப்பு வாரி
தைத்தகத வின்பேர்தாழ் †கடப்புத்தாழ் சீப்பாந்
தறிநிலைகந் தெழுக்கம்பங் கான்மதலை தாணு
இத்தனையுந் தூணின்பேர் யூபம்வேள் வித்தூண்
என்பரா ளானம்வெளி லானைத்தூ ணுகு
மத்திகையே கவுசிகந்தம் பமும்விளக்குத் தண்டாம்
வல்லிகையு மதற்காகுங் குறுந்தறிபோ திகையே. 254.

போதம்பா றம்பிபா ரதிதோணி வங்கம்
புணையானந் திமிலிகவ்வு மதலைதொள்ளு நாவாய்க்
கோதகஞ் சதாப்பஃறி பாதையா தனமுங்
கூறுமரக் கலம்பதினெட் டாமதிற்பா யிதையாஞ்
சேதமறு வஞ்சிவள்ள மோடந்தோ ணியுமே
சிறுகலமாம் படுவையம்பி மிதவைதொள்ளுப் பகடு
பாதையிற்போம் பட்டிகையே புணையெனுமேழ் பேரும்
படிந்ததெப்ப மதின்பேராம் விசியின்பே ரரியே. 255.

அரிகுயவெந் திரம்வையஞ் சயந்தனங்கூ விரியே [பேர்
யகல்கொடிஞ்சி யிரதஞ்செந் தனந்தேரொன் பான்
பருதிசில்லி நேமியுந்தி யுருளுதரி திகிரி
பாரியங்கா லாழிபத்துந் தேர்க்காலின் பேராந்
தெரிகிடுகு தேர்ச்சுற்றாஞ் சார்பலகை பாவாந்
தேர்மொட்டுக் கூம்பாந்தேர்க் கதிரின்பே ராரும்
விரிதட்டுத் தேர்நடுநாப் பணுமாகுங் கொடிஞ்சி
மெய்த்தகூ விரமாகுந் தவிசுதடுக் குரித்தே. 256.

உருள்சகடஞ் சாடுசா காடுவையம் பாண்டி
லொழுகுவண்டி லாம்பாண்டில் கஞ்சிகைவை யமுமே
பரிகள்கட்டு மூர்தியின்பேர் கந்திருசுள் ளிரும்பாம்
பண்டியுமாந் தண்டிகைகஞ் சிகைமணிக்கால் யான
மரசர்வா கனம்வையஞ் சிவிகையின்பேர் பள்ளி
*யணிதமுமாம் பீடிகைவிட் டரந்தவிசு பீடம்
வரதிபத்தி ராசனஞ்சிங் காதனமாம் பாண்டில்
மஞ்சமொடு பரியங்கம் பாரிகட்டி லுறுமே. 257.

†உறிசிக்கஞ் சிதர்தூக்குச் சிமிலியாந் தடியே
யுலக்கைமுச லமுமாஞ்சோ தனிதுடைப்ப மாறு
முறமதைச்சூற் பஞ்சுழகு சேட்டைசின்னந் தட்டு
முற்றிலென்பார் குதம்பந்தாங் கிடுகுசட்ட மாகு
மிறவை வட்டில் வட்டிகைகூ டைப்போரஞ் சேணி
யிறவையே கடவைதட வையுமேணி யாகுந்
தறுகுகண்ணே ணியின்பேரே மால்பாகுந் தழலே
தட்டைகிளி கடிகருவி யாமெனச்சொல் லினரே. 258

சொற்கழங்கு காசுவல்லுச் சூதாகுங் கவறு
துள்ளாயந் தாயமதாஞ் சாரிநா யாகு
நற்கலனை படைபடைவா ணுகந்தொடுப்பே ரலமே
நாஞ்சிலி லாங்கலப்பை பணவைகழு திதணங்
கற்குலவு பரணின்பே ரம்பணங்கால் குளகங்
கடன்கச்சந் தூம்புமரக் காலின்பேர் நாழி
வற்கமே குஞ்சமதாந் தண்டுகுழா யின்பேர்
மஞ்சுகமஞ் சிகைபேழை மூழிபெட்டி யாமே. 259.

ஆம்பியே பூட்டைகா ராம்பிகிழா ரரியா
மாசே லுஞ்சலூஞ் சலின்பேராம் பெரிய
தாம்பின்பேர் பண்பாகும் பிழாவிடா விறையாந்
தயிர்கடையுந் தறிவெளிலா மூழிமத்த மூழை
காம்புமத்தின் பேர்வகிர்வார் வள்ளாகுந் துணியே
கடிகைகண்டந் துண்டமாங் கஞ்சனந்தற் பணமே
பூம்படிமக் கலஞடி முகிர்தமொளி வட்டம்
புளகமத்தந் தெரிசனங்கண் ணுடியின்பேர் கூறே. 260.

கூறைவே டகம்புட்டங் காளகஞ்சித் திரையே
கோடிகோ டிகம்படாம் பரிவட்டஞ் சீரை
வேறுடையம் பரஞ்சாடி நீவியந்து சாடை
வேதகம்பட் டாசாரங் கலைகலிங்கம் பஞ்சி
யாறுடுக்கை கோசிகஞ்சம் படந்தானை வட்ட
மாபரணஞ் சூடிகம்வத் திரம்வாசம் புடவை
தூறின்மடி மிடையலிலக் கரமறுவை சீலை
*துப்பட்டி வேட்டிசோ மன்றுகிலென் பாரே. 261.

பாரியொடு நாகமுநல் லாடையாங் காம்பு
பாளிதங்கோ சிகம்பட்டு நேத்திரம்பட் டாடைப்
பேரெனலாந் தேவாங்கஞ் சாயச்சீ லையின்பேர்
பிணித்திடுசித் திரப்புடவை பொத்தகமென் றூகும்
போர்வைமீக் கோளாகும் வடகமத்தா வாளம்
போர்த்தியவுல் லாசமுமா முத்தரா சங்கஞ்
சாருமுத்த ரீகமே யேகாச மாங்கொய்
சகநீவி யாந்தோக்கை முன்றானை மெய்யே. 262.

* கேழ்க்கரகம் (பி-ம்)
* கதவுகபா (பி-ம்)

* யணிதமுமாம் (பி-ம்)
† உறிசிதகஞ் (பி-ம்)
* கதிலின்பே ராறுறென் றூகவுரைப் பாரே (பி-ம்)

மெய்ப்பைகாஞ் சுகமங்கி காஞ்சிகைகுப் பாய
மேல்வானங் கஞ்சுகமுஞ் சட்டையாம் வயிரம்
வைப்பின்வயி ரச்சூழி மயிர்ப்படமாம் விணிகை
வார்வம்பு பட்டிகைவட் டுடைமூலைக்கச் சின்பேர்
கைப்பில்குஞ்ச கந்தலைப்பா வாங்கண்டங் காண்டங்
கஞ்சிகை படாமெழினி யவடிபடந் திரைப்பேர்
ஐப்படங்கு வானிவிதா னமுமேற்கட் டியின்பே
ராகுங்கே வணங்குழிவட் டத்தின்பே *ரணையே. 263.

அணைதவிசு தளிமமெத்தை யாகுமுபத் தாண
மடைத்ததலை யணையின்பேர் கம்பலஞ்சிம் புளியும்
பணையுறுகம் பளத்தின்பேர் கேதனம் பதாகை
படங்குபடாஞ் சத்திவிலோ தனந்தோகை வானி
யிணைதுவசம் பெருங்கொடியாஞ் சிறுகொடிகத் திகையா
மோர்வீதிக் கொடிவிடங்க மாகுந்தார் சிதவல்
துணிசிகூ விரமுந்தேர்க் கொடியாமோ வியமுந்
துலங்குறுவட் டிகையோவுஞ் சித்திரப்பேர் மரபே.

மரவுரிவற் கலையிறைஞ்சி சீரையின்பே ராகும்
வளர்பதலை தளஞ்சாடி யகளமுந்தா ளியின்பேர்
உரைகரீ ரந்தடாக் குழிசியா மிடங்க
ருற்றவட்ட நிறைநீர்ச்சா லாமிடங்கை குடிகை
பரவுகடந் தாலிகும்பங் குணங்கலசங் குடமாம்
பானைமிடாக் குண்டமதா நுவற்கரிதற் கரியே
கரகஞ்சீ கரங்கன்னல் சிரகமதாங் குடிஞை [ங்கே.
கடிஞைபிச்சைப் பாத்திரமாஞ் சுடர்மணிக்கொப் பண
கொப்புரி கிடாரமொடு தவிசுமதற் காகும்
குடுவைகுண்டு விசனைசட்டி யாங்கலசப் பானை
யப்பெயர்கஞ் சனையாமந் தனிதயிர்த்தா ழியின்பே
ரகில்சராவஞ் சுத்திகையாம் பாண்டிலிடிஞ் சிலுமென்
றிப்பெயரே சுடர்தகளி யாம்பாண்டங் கலமென்
றிரண்டுமே கொள்கலப்பேர். மூடைபொதி சுமைப்பேர்
எய்ப்பறு சிலாவட்டஞ் சாணைக்கல் லாகு
மெழுதுகோல் துகிலிகைகோ லஞ்சனக்கோல் வடிவே.

* ரணுமே (பி-ம்)

ஆறுவது இயற்கை செயற்கைப் பல்பொருட் பெயர்த்தொகுதி முற்றும்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[735-வது பக்கத் தொடர்ச்சி]

(7) அபாவம்:—இது முன்னர்க் கூறிய அறுவகைப் பதார்த்தங்களைப்போல் விதிமுக ஞானத்தால் அறியப் பட்ட பாவரூபம் அன்று. இது நிடேதமுகப் பிரமா ணத்தா லறியப்படுவதாகும். பாவத்திற்கு வேறுவது அபாவம். அவபாவத்தின் அபாவத்தைப் பிரதியோகி யென்பர். இதை,

இல்லையில்லை யென்னிறேன்று மில்லா தல்ல
இயல்பாகி மென்றமுள்ள இயற்கை யாகிச்
சொல்லரிய தன்மையதா யான்று னென்னத்
தோன்றுதெல் லாம்விழுங்குஞ் சொரூப மாகி
அல்லையுண்ட பகல்போல வவித்தை யெல்லாம்
அடையவுண்டு தடையறவுன் னறிவைத் தானே
வெல்லவுண்டிங் குன்னையுந்தா னுகக் கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளக்குந் தானே

என்னும் தாயுமானவர் செய்யுளா லறிக.

அபாவம் இருவகை. அவையாவன:—சம்சர்க்காபா வம், அந்நியோந்நியாபாவம் எனப்படுவன. அபேத சம்பந்தத்தால் வரைந்துகொள்ளப்பட்டது அந்நி யோந்நியா பாவமாகும். ஏனைய சம்பந்தத்தால் வரை ந்துகொள்ளப்பட்டது சம்சர்க்கா பாவமாம். சம்சர் க்கா பாவத்தை அறிவிக்கும் வாக்கியத்தில் பிரயோகி முதல்வேற்றுமையிலும் அநுயோகி ஏழாம் வேற்று மையிலும் காணப்படும். (உ-ம்) "கபாலத்தில் கடமில் லை," என்பதில் கடம் பிரதியோகி, கபாலம் என்பது அநுயோகி; ஆயின் அந்நியோந்நியா பாவத்தை அறி விக்கும் வாக்கியமே அநுயோகியும் பிரதியோகியும். இவ்விரண்டும் முதல் வேற்றுமையிலே காணப்படும்

(உ-ம்) கடம் படமன்று.

மேற்கண்ட இருவகை அபாவங்களில், சம்சர்க்காபா வமானது மூவகையாம். அவையாவன—பிராகபாவம் பிரத்துவம்சா பாவம், அத்தியந்தாபாவம் என்பன. பிராகபாவமாவது, உற்பத்திக்குமுன் காரணங்களின் காரிய மின்மை யென்பது - எனவே முன்னின்மை யாம். பிரத்துவம்சா பாமாவது ஒரு பொருள் அழிந்த இடத்து மீண்டும் அது தோன்றாமை - எனவே, பின் இன்மையாம். அத்தியந்தா பாவமாவது - முக்காலத் தினு மின்மையாகும் - (வாயுவில் உருவம் இன்மை) - இவற்றை அப்பர் பாசுரங்களால் விளக்குவாம்:—

பிராகபாவம்:—

பித்த னைப்பெருந் தேவர் தொழப்படும்
அத்த னையணி யாமாத்தூர் மேவிய
முத்த னையடி யேனுண் முயறலும்
பத்தி வெள்ளம் பரந்தது காண்மினே.

திருவாமாத்தூர் - திருக் குறுந்தொகை 6.

இதில் காரியம் "பத்தி வெள்ளம்"; இதன் காரண மாய் நின்றது "உள் முயறல்", அதாவது அகத்தின் க்கண் செய்த முயற்சி. இம்முயற்சியின் ஆரம்பத்தில் பத்திவெள்ளப் பரப்பு இல்லை. முயற்சியின் முடிவு பத்திவெள்ள மாகிய காரியம்; ஆதலால் இக்காரியம் உற்பத்திக்கு முன்னின்மையால் பிராக பாவமாகும்.

பிரத்துவம்சா பாவம்:—

பட்டி யேறுகந் தேறிப் பலவிலம்
இட்ட மாக விரந்துண் டுழிதரும்
அட்ட மூர்த்தியண் ணாமலை கைதொழக்
கெட்டுப் போம்வினை கேடில்லை காண்மினே.

திருவண்ணாமலை - திருக்குறுந்தொகை 1.

அட்டமூர்த்தி யண்ணாமலையைக் கைதொழுதவுடன், நமதுவினை, கெடும் என்பதில், "வினைகெடும்" என்ப துடன் நிறுத்தாமல் "கேடு இல்லை" அதாவது இனி மீண்டும் அழிந்தவினை தோன்றாது என்னும் பொரு ளுண்டு. இத்தகைய அபாவமே பிரத்துவம்சா பாவ மென்பர். இதில்காரணம் கைதொழல், காரியம் "வினை கெடல்" இவ்வாறு ஒருகாலத் தின்மையாகாது அத்தி யந்தா பாவம் முற்றுமின்மை எக்காலத்திலுமாம்.

அந்நியோந்நியாபாவம் "குடம் ஆடையன்று" என் பது போலாம். அதை,

மண்ணல்லை [illegible]
[illegible]

எண்ணல்லை யெழுத்தல்லை யெரியு மல்லை
யிரவல்லை பகலல்லை யாவு மல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடுமல்லை
பிறிதல்லை யானையும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீமை யல்லை
யுணர்வரிய வொற்றியூ ருடைய கோவே

திருவொற்றியூர் - திருத்தாண்டகம் 9.

என்னும் அப்பர் தேவார பாசுரத்தா லறியலாம்.

தத்துவநூல்களை ஆராய்கின்ற அறிஞருக்கு அபாவங்களின் இலக்கணவுணர்ச்சி இன்றியமையாததாகும். தர்க்கத்தின் இப்பாகத்தை முடிக்கு முன்னர்ச் சிறிது இவ்வபாவத் தன்மையை விரித்துக்கூறுவாம்:—

ஆங்கில முதலிய மேல் நாட்டுத் தர்க்கத்தில் அபாவத்தை இருவகையாகக் கொள்வர். சாமானிய அபாவமென்றும், (Condradictory) விசேட அபாவமென்றும் (Contrarary) எதிர்மறைத்தன்மைகளைப்பிரித்துக் காட்டுவார். நல்லவன் என்பதற்கு நல்லவனல்லன் என்பது சாமானிய அபாவமென்றும், தீயவன் என்பது சிறப்பு அபாவமென்றும் கூறப்படும். இவை தவிர வேறு அபாவங்கள் மேல்நாட்டுத்தர்க்கங்களில் காணப்படா. நமதுநாட்டின் தர்க்கத்தில் மேற்கண்ட அபாவ வகைகளுடன் மற்றும் பலவகைகளும் உள.

அபாவமானது, உண்மைநிலையைக் குறிப்பிடாமல் இன்மைநிலையா யிருத்தல்கூடுமோ என்று ஆராய்வது பற்பல சமயங்களின் தத்துவ விசாரணையாகும். உண்மை ஞானத்தாலே இன்மைஞானம் உண்டாகின்றதாகையால், அபாவத்தை எந்நிலையில் வகுப்பதென்பது தர்க்கத்தில் பெரும் போராட்ட மாகும். இதன் தன்மையை முழுவதும் அறியவேண்டுவோர் விருத்திப்பிரபாகரத்தில் ஆறும் பிரகாசமாகிய அநுபலப்திப் பிரமாண விரிவுரையில், அபாவத்தின் சாமானிய லக்ஷணமும் பேதமும், என்கிற முதல் பாகத்திலேயே காணலாம். இந்தக் கட்டுரையில் நாம் எடுத்துக்கொண்ட விஷயம் அப்பர் தர்க்கத்தில் வல்லுவரா வென்பது விளக்க வேண்டுவதுபற்றி மேற்கூறிய அநுபலப்தி அபாவ இலக்கணங்கள் ஆங்காங்கு அப்பர் தேவாரச் சொற்றொடர்களைக்கொண்டு காட்டினோ மாதலால், தர்க்கத்தின் இப்பாகத்தை இத்துடன்நிறுத்தி, புத்தி முதலான ஆன்மகுணங்களின் தன்மைகளையும் அவற்றிலுள்ள பிறழ்ச்சிமுதலியவைகளையும் ஆராயப்புகுவோம்.

—§—

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[736-வது பக்கத் தொடர்ச்சி]

மறலியின் முறுவல் மறைக்கற் பாலதே.

அகம்பனன் பகர்ந்தவைகளை யடியுடன் மறந்தனனோ, அல்லது மற்றுமோர்முறை சூர்ப்பணகையும் அவைகளைச் சொல்லட்டுமே என்னவே எண்ணினனோ என்று துணிந்தியம்ப இயலாவகை வான்மீகி முனிவர் இராவணனை இயக்குகின்றதுமன்றி அச்சூர்ப்பணகை, தானழிந்ததேபோல் தன்னருந் தமயனும் அழியவேண்டுமென்று கருதியே சீதாதேவியின்பால் அவன தாசையைத் தூண்டினளென்ன அயிர்ப்பதற்குரியதாகவும் அவள்மொழிகள் நிற்கின்றன. ஆயிரம் இராவணர் அவ்வொரு இராமனுக்கெதிர் நிற்கலாற்றார் என்பதை, கரன்வதை யகவயின் இவள் கண்டதன்றியும், அக்குறிப்பினை இராவணற்கிங்குக் கூறவும் கூறினள். அகம்பனனும் அதனை யறிந்து இராவணனுக்குக் கூறியிருக்கின்றான். எனினும் இராமன்வெம் சரத்தினால் அரக்கர்குலம் அடைந்தவொரு நெடும்பழியைத் தீர்ப்பதற்கு இவ்விருவரும் இராவணனுக்கு உரைத்த உபாயத்தில் ஒரு வேற்றுமையுளது. கரவினால் சீதையைக் களவுசெய்து கொணருமாறு கூறுகின்றான் அகம்பனன்; சூர்ப்பணகையோ, இராமனைப் பொருதுகொன்று சீதையைக் கவருமாறு கூறுவாள். இதனால் சீதையை இராமன் இழப்பதன் முன்னர்த் தான் இராமனை இழப்பதற்குத் துணிந்திருப்பதுமல்லாமல், இக்கருமத்தில் இராவணன் உயிரை இழப்பதே திண்ணமென்பது அறிந்துகொள்ளற்கு ஆற்றாதவளல்லள் அவள். இவைகளை நினைவிற்கொண்டு இனிக் கம்பர்பெருமான் இந்நிலையினைக் கையாள்கின்ற வகையைக் கருதுவோம்.

அகம்பனன் வந்திலன்; [illegible] மூக்கினள் அச்சூர்ப்பணகையே வந்து தன் [illegible] விளம்பலுறுகின்றாள். இன்னதே நாடகமுறைக்கு நனி சிறந்ததெனக் கம்பர் கருதி முதனூலின்று மாறினர். சூர்ப்பணகையின் மனநிலையிலும் ஒரு மாறுபாடுளது, அங்கு அவ் வடநூலில், இராமன்பால் பெருகிய பகையேகொண்டு பெயர்கின்றாளவள்; இந்நூலிலோ, அவளுக்கு இன்னும் இராமனாசையே பெருகுகின்றது. ஆதலின் இப்படலத்தின் முதலிலேயே,

இரைக்குநெடும் பணையரக்க ரிறந்ததனை
மறந்தனள்போ லிராமன் றுங்க
வரைப்புயத்தி னிடைக்கிடந்த பேராசை
மனங்கவற்ற வாற்று ளாகித்
திரைப்பரவைப் போகழித் திண்ணகரிற்
கடிதோடிச் சீதை தன்மை
உரைப்பெனெனச் சூர்ப்பணகை வரவிருந்தா
னிருந்தபரி சுரைத்து மன்னோ

[சூர்ப்பணகையானவள், முழங்குகின்ற பெரியபேரிகைகளையுடைய கரன்முதலிய அரக்கர்கள் இறந்தழிந்த செய்தியை மறந்தவள் போல, இராமனது உயர்ந்தமலைபோன்ற தோளினிடத்துத் தான் வைத்த மிகுந்த ஆசையானது தன் மனத்தை வருத்த, அதனைப் பொறுக்கமாட்டாதவளாய், அலைகளையுடைய கடலாகிய பெரிய அகழியையுடைய வலிய இலங்கையில் விரைந்துசென்று சேர்ந்து, சீதையின் இயல்பை இராவணனுக்குக் கூறுவேன் எனக் கருதிய அவள் வரும்போது, அங்கிருந்த இராவணன் சபையில் வீற்றிருந்த விதத்தினை உரைப்போம்.]

எனஎடுத்துக் கம்பர் இயம்புவாராகின்றார். இராவணன் அரசிருக்கையை அறைகின்ற பாசுரங்கள் மிகச் செவ்வியன:—

நிலையிலா வுலகினிடை நிற்பனவு
நடப்பனவு நெறியி னீந்த

மலரின்மே லான்முகற்கும் வகுப்பரிது
நுனிப்பதொரு வரம்பி லாற்றல்
உலைவிலா வகையுழந்த தருமமென
நினைந்தவெலா முதவுந் தச்சன்
புலனெலாந் தெரிப்பதொரு புனைமணிமண்
டபமதனிற் பொலிய மன்னோ

[நிலையற்ற உலகத்தில் சராசரங்களை யெல்லாம் முறைமைப்படி படைத்த, தாமரை மலரின்மேலுள்ள பிரம்மனுக்கும் படைக்க இயலாததும், நுட்பமாகிய ஒரு எல்லையற்ற வல்லமையால் தீங்கில்லாவகைமுயன்றுசெய்ததருமம்போல நினைத்தவைகளை எல்லாம் தரவல்ல விசுவகர்மா என்னும் தெய்வத் தச்சனது சிற்பநூலறிவு முழுவதையும் காட்டுவதுமான ஒப்பற்ற அழகிய மணிகளால் அலங்கரித்த சபாமண்டபத்தில்]

பண்டலங்கு திசைக்களிற்றின் பணைமருப்பி
னிணையொடியப் படர்ந்த பொற்றோள்
விண்டலங்க ளுறவீங்கி யோங்குதய
மால்வரையின் விளங்க மீதில்
குண்டலங்கள் குலவரையை வலம்வருவா
னிரவிகொழுங் கதிர்சூழ் கற்றை
மண்டலங்கள் பன்னிரண்டு நாலைந்தாய்ப்
பொலிந்தவென வயங்க மன்னோ

[முன்பு, அசைகின்ற திசையானைகளின் பருத்த இரண்டு கொம்புகளும் ஒடியும்படி வளர்ந்த அழகிய தோள்கள் ஆகாயத்தை அளாவி உயர்ந்து பெரிய உதயகிரிபோல் பிரகாசிக்கவும், அத்தோள்களின்மேல் தன் காதுகளினின்று தொங்குகின்ற குண்டலங்கள் இருபதும், செழுமையான கிரணங்களின் கற்றை சூழப்பெற்ற சூரியமண்டலங்கள் பன்னிரண்டும் சிறந்த மேருமலையைச் சூழ இருபதாய் விளங்கினபோலப் பிரகாசிக்கவும்.—]

புலியினத ளுடையானும் பொன்னுடை
புனைந்தானும் பூவி னானும்
நலியும்வலத் தாரல்லர் தேவரினிங்
கியாவரினி நாட்ட லல்லார்.
மெலியுமிடை தடிக்குமுலை வேயிளந்தோட்
சேயரிக்கண் வென்றி மாதர்
வலியநெடும் புலவியினும் வணங்காத
மகுடநிரை வயங்க மன்னோ

[புலித்தோலை உடுத்துள்ள சிவபிரானும், பொன்னுடை தரித்த திருமாலும், தாமரைமலரில் உள்ள பிரம்மதேவனும், இராவணனை வருத்தக்கூடிய வலிமையுடையவ ரல்லர். எனின், தேவரில் வேறு யார் அவனை வெல்லக்கூடியவர்களாகக் குறிப்பதற் குரியவர்? மெல்லிய இடையையும் தடித்த முலைகளையும் இள மூங்கில்போன்ற தோள்களையும் சிவந்த இரேகைகளையுடைய கண்களையும் யாவரையும் வெல்லுந் தன்மையையு முடைய மகளிரது நீண்ட வலிய ஊடலிலும் வணங்காத கிரீடங்களின் வரிசை விளங்கவும்]

வாளுலா முழுமணிகள் வயங்கொளியின்
றொகைவழங்க வயிரக் குன்றத்
தோளெலாம் படிசுமந்த விடவரவின்
படநிரையிற் றோன்ற வான்ற
நாளெல்லாம் புடைதயங்க நாமநீ
ரிலங்கையிற்றான் வாரி யிட்ட
கோளெலாங் கிடந்தநெடுஞ் சிறையன்ன
நிறையாரங் குலவ மன்னோ

[ஒளி வீசுகின்ற பெரிய இரத்தினங்கள், விளங்கும் ஒளியின் தொகுதியை மிகுதியாகவீசுவதால், வயிரமலைபோன்ற தோள்கள்யாவும் பூமியைத் தாங்குகின்ற விஷத்தையுடைய ஆதிசேஷனுடைய படங்களின் வரிசையைப் போல விளங்கவும்—சிறந்த நக்ஷத்திரங்கள் எல்லாம் பக்கத்தில் விளங்கும்படி அச்சத்தைத் தருகின்ற கடல் நீரால் சூழப்பட்ட இலங்கையில் அவ்விராவணன் அடைத்து வைத்த கிரகங்கள் எல்லாம் கிடந்த பெரிய சிறைச்சாலையை ஒத்த நிறைந்த இரத்தினமாலை பிரகாசிக்கவும்]

வீற்றிருந்தனன் என்னச் சொல்லி, இதன்மேல் இவன் அவைக்கண் நிகழ்ந்த முறைமைகளைக் கம்பர் நெடிது நவிலப் புகுகின்றார். ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலுமுள்ள "மன்" என்னும் இடைச்சொல் "ஐயோ இவ்வைபவங்கள் அத்தனையும் கழிகின்றனவே, கழிகின்றனவே" என்று கவி ஒருசிறிது இரங்குமாறுபோல் தோற்றுவிக்கின்றது. மற்றவை யாவதாயினும், மாதர்தம் வலிய நெடும் புலவியிலும் வணங்காத மகுடநிரை இனி உகுந்தொழியலாகுமே என ஏங்குவார்போல் கம்பர் இயம்புகின்றார். ஊடலிற் றோற்றவரே வென்றவராதலின், உண்மை வெற்றியின் இலக்கணம் தெரியாதவன் இவ்விராவணன் என்னுங்குறிப்பு மிதனிலடங்கியிருக்கக் காணலாம். மற்று வேறு இவன் பெற்றுள அனைத்தும் அவன் தோற்றதற்கே அடையாளம் போலும். இங்கு, "மெலியுமிடை தடித்தமுலை வேயிளந்தோட் சேயரிக்கண் வென்றி மாதர்" எனக் கம்பரே மபலுற்றார்போல் பெண்ணழகைப் பன்னுவது யாதும் வியப்பன்று. முன், கலைக்கோட்டுமாமுனியின் வரலாற்றைத் தயரதற்கு உரைக்கப்புகுந்த வசிட்ட மாமுனி, நெற்றிக்கொம்புடைய அவ்விளந் தவசியை வஞ்சிப்பான் வழிக்கொண்ட கணிகையர்தமை, "சோதி நுதற் கருநெடுங்கண் துவரிதழ்வாய்த் தரளநகைத் துணைமென் கொங்கை மாதர்" எனத் தம் நாவில் இரதம் ஊறினர்போல் வருணிப்பார். மற்றுள பலவகைகளில் வசிட்டனுடன் என்றும் இகல்கொண்ட கோசிகன் இதனினும் வென்றிகல விரும்பினனென, பின்னர் இக்கணிகைகளின் திறத்தினைச் சனகன்முன், "சிலைக்கோட்டு நுதற்குதலைச் செங்கனிவாய்க் கருநெடுங்கண் விலைக்கோட்டும் பேரல்குல் மின்னுடங்கும் இடையார்" என அம்மாதரார் அழகினைத் தானும் விழைந்தவாறு போல் பன்னலுற்றார். கவிவாரர்பால் கற்றபெற்றி முனிவரும் வனிதையரைக் கனிந்தசொல்லால் நிகழ்த்தினரோ, மற்று முனிவரர்பால் துணிந்து பெற்ற சொற்சுவையோ இது வென்று இயம்பும்பரிசு எளியதன்று.

வற்கலையுடுத்த முனிவருக்குச் சொற்கலையின் திறமுணர்தற் சிறிதருமையே. அற்றங்காப்பதுடன் அழகும் செய்யவேண்டுமென்னும் கடமை ஆடைக்கலையே போல் பாடற்கலைக்கு முளது. இராவணன் பேழ்வாய் பிளந்த அரக்கனேயா யிருக்கலாம்; வேதியர்செய்வேள்வியைச் சிதைப்பவன், கன்னியர்தம் அருங் கற்பினையழிப்பவன், உண்மையே. விட்டுணுவின் நேமியால் நூறுமுறை அவன் அடிபட்டு மிருக்கலாம். இவைகளை இங்கு எடுத்துக் கூறுவானேன். அரக்கன் தீமையைக் கம்பரும் அறிவார். "இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல் துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினள்" என்ன அவன் தீமையை அயோத்தியில் நினைவூட்டுவாராயினும் இலங்கையின்கண் அதனை மறைத்துவிடுவார். "இத்தனைக் கொடியபாவி இராவணனுக்கு இன்று நாசகாலம் நண்ணத் துவக்கு

கின்றது", என்பார்போல் பேசுகின்றார் வான்மீகி. கம்பர், "நாசகாலம் வரவிருக்கும் இவ்வரக்கன் எத்துணை வைபவத்துடன் வீற்றிருக்கின்றான் காண்" என்னத் தன் சித்திரத்தைத் தீட்டுகின்றார். நாசமடைதற்குரிய கொடுமைகளைச் செய்தவன் இராவணன் என்னும் வரையில் யாவரும் அறிந்ததே. அந்நினைவு உள்ளூற நின்றிருப்பினும், இப்பொழுது இவன் செல்வச்சிறப்புக்களைக் காணுங்கால், "ஏ ஏ மதியிலி, அடாதன செய்து நீ உன் ஆற்றலால் இப்பதவியைப் பெற்றிருக்கின்றனை. இனியேனும் நீ தொழிந்து அப்பதவியைக் காத்துக்கொண்டால் ஆகாதோ' என்று இரங்கும்படி அமைந்திருக்கின்றது இக்காட்சி. தவத்தின் செம்மையர் தீமையைக் கழறுவார், கலையின் செல்வர் நன்மையை நாடுவார். இவ்விருவகையிலும் ஏற்றந்தாழ்வு எங்குளதென்றாராயாமலே, வான்மீக முனிவருக்கும் கம்பருக்கும் இங்குள்ள வேற்றுமைக்குரிய காரணம் இதுவென்றுணர்ந்தாற் போதும்.

இராவணன் இருந்த பரிசு இதுவாயின் அவன் அவைக்கண் நிகழ்ந்த பரிசு நினையவும் அரிய வைபவம் வாய்ந்தது. ஆற்றலால் ஒருவன் அடையவல்லன இதன்மேலில்லை. எனினும் அவ்வாற்றல் நல்லறமல்லதாதலின் இவ்வேற்றமெல்லாம் இழிவுடைத்தாயின:—

ஆய்வரும் பெருவலி யரக்க ராதியோர்
நாயகர் நளிர்மணி மகுட நண்ணலால்
தேய்வுறத் தேய்வுறப் பெயர்ந்து செஞ்சுடர்
ஆய்மணிப் பொலங்கழ லடிநின் றார்ப்பவே

[சிவந்த ஒளியுடைய சிறந்த மணிகள் பதித்த பொன்கழல்—அளப்பதற்கரிய பெரிய வலியுடைய அரக்கர் முதலிய தலைவர்களின் பெரிய இரத்தின கிரீடங்கள் அவர் அடி விழுந்து வணங்குந்தோறும் வந்துபடுதலால் தேய்ந்து தேய்ந்து புதிய புதிய ஒளியுடன் கால்களில் பொருந்தி ஒலிக்கவும்—]

மூவகை யுலகினு முதல்வர் முந்தையோர்
ஓவல ருதவிய பரிசி னோங்கல்போல்
தேவரு மவுணரு முதலி னோர்திசை
தூவிய நறுமலர்க் குப்பை துன்னவே.

[மூவுலகங்களிலும் தலைவர்களாயுள்ளவர், முற்பட்டு வந்து ஓயாமல் செலுத்திய காணிக்கைகளின் குவியலைப் போல, தேவர்கள் அசுரர்கள் முதலியோர் எல்லாத் திக்குக்களிலுமிருந்து சொரிந்த மணமுள்ள பல மலர்க்குவியல்கள் நிறைந்திருக்கவும்]

இன்னபோ திவ்வழி நோக்கு மென்பதை
உன்னலர் காதலஞ் சுமந்த வுச்சியர்
மின்னவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள்
துன்னினர் முறைமுறை துறையிற் சுற்றவே

[ஒளிவிளங்கும் இரத்தின கிரீடங்கள் அணிந்த வித்தியாதர வேந்தர்கள்—இன்ன சமயத்தில் இராவணன் தம் பக்கம் திரும்புவான் என்பதை நினையாமலே எப்பொழுதும் தம் தலைமீது சுமந்த கையினர்களாய் நெருங்கி வரிசைவரிசையாகச் சூழ்ந்திருக்கவும்—]

மங்கையர் திறத்தொரு மாற்றங் கூறினுந்
தங்களை யாமெனத் தாழுஞ் சென்னியர்
அங்கையு முள்ளமுங் குவிந்த வாக்கையர்
சிங்கவே றெனத்திறற் சித்தர் சேரவே

[பணிப்பெண்களைக் குறித்து ஏதேனும் அவன் இயம்பினாலும், தங்களைக் குறித்துக்கூறினானோவென மயங்கி வணங்கும் தலையுடையவர்களும், கையும் மனமும் குவிந்தொடுங்கிய உடலை உடையவர்களாய், ஆண்சிங்கமனைய ஆற்றல் உடைய சித்தர்கள் திரண்டு நிற்கவும்—]

அன்னவ னமைச்சரை நோக்கி யாண்டொரு
நன்மொழி பகரினு நடுங்குஞ் சிந்தையர்
என்னைகொல் பணியென விறைஞ்சு கின்றனர்
கின்னரர் பெரும்பயங் கிடந்த நெஞ்சினர்.

[இராவணன் தன் மந்திரிகளை நோக்கி ஒரு நல்ல வார்த்தையைச் சொன்னாலும், தங்களைத் தண்டிப்பதற்கே ஏதோ கூறினான் என்று மிக நடுங்கும் மனமுடையவர்களாய்ப் பெரிய பயம்தங்கிய மனத்தினோடு கட்டளை யாதோவென்று கின்னரர் வணங்குகின்றவர்களாகவும்]

பிரகர நெடுந்திசைப் பெருந்தண் டேந்திய
கரதலத் தண்ணலைக் கண்ணி னோக்கிய
நரகின ராமென நடுங்கு நாவினர்
உரகர்க டம்மன முலைந்து சூழவே

[தண்டனை செய்பவனும், தெற்குத் திசைக்குத் தலைவனும் பெரிய தண்டினை ஏந்திய கையையுடையவனுமாகிய எமதர்மனைக் கண்ணிற் கண்ட நரகவாசிகளைப்போல நாக்கு நடுங்குபவர்களாய் மனம் சோர்ந்து உரகர்கள் சூழவும்]

திசையுறு கரிகளைச் செற்றுத் தேவனும்
வசையுறக் கைலையை மறித்து வானெலாம்
அசையுறப் புரந்தர னடர்த்த தோள்களி
னிசையினைத் தும்புரு விசையி னேத்தவே

[திக்கஜங்களை வென்று, சிவபிரானும் அவமானம் அடையும்படி கைலாயமலையைப் பெயர்த்து, ஆகாய மெல்லாம் நடுங்கும்படி இந்திரனை நெருக்கிப் போர்செய்த அவன் தோள்களின் கீர்த்தியைத் தும்புருமுனிவன் இசையோடு பாடிப் புகழவும்]

சேணுயர் நெறிமுறை திறம்ப லின்றியே
பாணிகள் பணிசெயப் பழுதில் பண்ணிடை
வீணையி னரம்பிடை விளைத்த தேமறை
வாணியி னாரதன் செவியில் வார்க்கவே

[மேலுலகில் வழங்கும் கீதமுறை வழுவாமல் கைகள் வருட, வீணையின் தந்திகளில் உண்டாக்கிய பழுதற்ற இராகத்தில் அமைத்த இனிய வேதத்தை, நாரதன் சரஸ்வதி போல அவன் காதுகளில் செலுத்தவும்]

மேகமென் றருத்தி கொண்டு
விண்ணவர் தருவும் விஞ்சை
நாகமுஞ் சுரந்த தீந்தேம்
புனலொடு மளாவி நவ்வித்
தோகையர் துகிலிற் றோயு
மென்பதோர் துணுக்கத் தோடுஞ்
சீகர மகர வேலைக்
காவலன் சிந்த மன்னோ

[மகரமீன்களையுடைய கடலுக்குத்தலைவனான வருணன் கற்பகத்தருக்களும் வித்தியாதரவுலகத்துத் தருக்களும் சுரந்த மதுரமான தேனை நீரோடு கலந்து மேகமாகிய வீசுகுழலில் எடுத்துக்கொண்டு, சபையிலுள்ள மானும் மயிலும் போன்ற மாதரது ஆடையிற் படியுமென்ற அச்சத்துடனே சிறுதிவலைகள் சிந்தவும்]

நறைமலர்த் தாதுந் தேனு
நளிநெடு மகுட கோடி
முறைமுறை யறையச் சிந்தி
முரிந்துகு மணியு முத்துந்
தறையிடை யுகாத முன்னந்
தாங்கினன் தழுவி வாங்கித்
துறைதொறுந் தொடர்ந்து நின்று
சமீரணன் றுடைப்ப மன்னோ

[வாயுபகவான், தேனுள்ள மலர்களிலிருந்து உதிர்கின்ற மகரந்தப் பொடிகளையும் தேனையும், அரசர்களுடைய நீண்ட கிரீடங்களின் தொகுதிகள் ஒன்றோடொன்று மோதி உடைந்து சிதறிச் சிந்துகின்ற இரத்தினங்களையும் முத்துக்களையும், தரையிடை விழுவதற்கு முன்னமே அங்கங்குச் சென்று ஏந்தியெடுத்துத் தொடர்ந்துசென்று இடந்தோறும் துடைத்துக்கொண்டிருக்கவும்]

மின்னுடை வேத்திரக் கையர் மெய்புகத்
துன்னெடுங் கஞ்சுகத் துகிலர் சோர்விலர்
பொன்னொடு வெள்ளியும் புரந்த ராதியர்க்
கின்னியன் முறைமுறை யிருக்கை யீயவே

[பிரகஸ்பதியும் சுக்கிரனும், ஒளி பொருந்திய பிரம்பை ஏந்தியவர்களும் உடம்பு முழுவதும் புகுந்த நீண்ட அங்கியைத் தரித்தவர்களும், சோம்பல் இல்லாதவர்களுமாய் இந்திரன் முதலியவர்களுக்கு முறைப்படி ஆசனங்களை இனிது கொடுக்கவும்]

இவ்வாறே யமனும் அக்கினியும் மற்றுளோரும் தத்தம் தொழில்களைப் புரியவும் இராவணன் அப்புனைமணிமண்டபம் பொலிய வீற்றிருந்தான். இவ்வளவும் இருப்பினும் என்! இப்பாசுரங்களை ஓதிவருங்கால் இப் பத்துத்தலை இருபதுதோள் பேராற்றல் அரக்கன் அரசிருக்கையில் மாண்பொன்றுந் தோன்றாமல் காக்கின்ற கம்பர்திறம் கருதத்தக்கது. இப்பாடல்களின் ஊடெல்லாம் ஒரு பரிகசம் உருவிவரக் காணலாம். "ஆகா ஊஹூ" என்று ஆரவாரஞ் செய்கின்ற தெருக்கூத்தரசன் கொலுமண்டப மணையவோர் காட்சியன்றி நலம்பெறத்திகழும் தகையுடையரசன் கொலு அமரும் பெருமை இதனில் தோன்றப்படாதென்பதே கம்பரது கருத்துப்போலும். மசரத மனையவர் வரமும் வாழ்க்கையும் நிச்சயம்போல் தோன்றாமையே கலையிருந்து காத்தற்குரிய நலம். எனினும் கோமாளிக் கூத்தினளவு இழியாமலும் சீரிய பெருமையினளவு உயர்த்தாமலும் இக்காட்சியை மிகச் செம்மையாய்க் கம்பர் செலுத்துகின்றார். வென்றி மாதர் வலிய நெடும் புலவியிலும் வணங்காத மகுடநிரை வயங்கவவன் வீற்றிருப்பதும், தம் பக்கம் திரும்புவானென்று தெரியாமலே விஞ்சைவேந்தர் காதலஞ் சுமந்த வுச்சியராய் நிற்றலும், மங்கையருடன் பேசினும் தங்களையாமெனப் பதறிய சித்தர்கள் சேர்வதும், அமைச்சருடன் அவன் உரைப்பதெல்லாந் தம்மைத் தண்டிக்கவேதானோ வெனத் துணுக்கமெய்திய கின்னரர் இறைஞ்சுவதும், மெல்லிய ஆடை நனைந்தால் மாதருடல் தெரிய, இராவணன் எத்தண்டனை தனக்கு விதிப்பனோ என்னுமச்சமுடன் வருணன் கூசிக் கூசி நீர்த்திவலை வீசுவதும், வாயுபகவான், கீழொன்று வீழாமுன் ஓடியோடி ஏந்துவதும், தமக்கு ஆதனம் தரவேண்டிய இந்திரன் முதலியோர்க்கு வியாழனும் வெள்ளியும் இங்கு முறை முறை யிருக்கை யீவதும் ஓர் வல்லியல் நாடகத்தையே (Melodrama) மெல்ல மெல்ல உணர்த்துகின்றன. இவைகளுக்கயல் எமதருமன் செய்தியைச் செப்புங்கால்,

சூலமே முதலிய துறந்து சுற்றிய
சேலையாற் சிறியவாய் புதைத்துச் செங்கையிற்
றோலுடை நெடும்பணை துவைக்குந் தோறெலாங்
காலன்வந் திசைக்குநாட் கடிகை கூறவே

[யமனானவன், சூலம் முதலிய தன் படைக்கலன்களை விட்டு, அரையில் உடுத்திருக்கின்ற சேலையினால் தன் வாயைப் பொத்திக்கொண்டு, தோலால் கட்டிய பெரிய நாழிகை முரசு அடிக்கும்போதெல்லாம் வந்து வந்து கடிகைப் பாடல்கள் பாடிச் சொல்லவும்]

ஆயினன் என்பர் நம் கவி. காலன் வந்திங்குச் சீலையால் வாய்புதைத்து நின்றது, பணிவுடைய பயத்தின் மெய்ப்பாடென் றெண்ணுவதன்முன் வேறொன்றும் அயிர்க்கவல்லதாகின்றது. தன்னையும் மீறி இளிவரும் நகையினை மறைத்து வாயினுள் புதைப்பதற்கும் சுற்றிய சேலையாற் காலன் தன் வாயினைப் பொத்தியிருப்பினும் இருக்கலாம். எற்றுக்குக் கூற்றுவன் இங்கு நகைத்தல் வேண்டுமென்பதைச் சிறிது உன்னினால் உணர்ந்துகொள்ளல் அருமையாகாது. கதுமெனத் தந்திசைத் தசமுகன் திரும்பினால் என்செய வெனுந் துணுக்கந் தூண்டத் தம் சிரமிசை குவித்த கரத்தராய் நிற்கும் விஞ்சைவேந்தரைக் காணுமளவில் காலனுக்குக் குறுநகை பிறத்தல் இயற்கையே. அரிவையர்க்கு அமைச்சருக்கு அவன்தானொன் றுரைப்பினும், தம்மையோ குறித்தனனென அஞ்சியஞ்சி இறைஞ்சுகின்ற சித்தர் கின்னரர்களை, கடிகை கூறியவாங்கே தன் கடைக்கண்ணால் பார்த்தவவ் வந்தகன்றன் வாயினில் மந்தநகை யுலவலாம். வாயுவொடு வருணனும் வழங்குகின்ற பெற்றியும் அவர்தம் முன்னைய சரித்திரம் அறிந்துள கூற்றுவற்குப் பெருநகை விளைக்கவல்லது. பண்டொர்நாள் நான்முக னவையின்கண் தேவர்கள் அமர்ந்திருந்தபோது, கங்கையின் கலைவிலகச் சமீரணன் அதிர்ந்து வீசவும், திருத்தகும் அவள் அவயவம் திகழும் காட்சியைக் காணலாகாதென ஏனையோர் தம் கண்களைப் புதைத்தாராயினும் மனனுற வருணன் மகிழ்ந்துநோக்கி முண்டக்கடவுளால் சாபமுற்றுப் பாரினிலரசனாய்ப் பிறந்தசெய்தி அந்தகற்குத் தெரிந்திருக்குமாதலின், குறும்பு மதியுடைய இவ்வருணன், மெல்லிய ஆடையை நனைத்து மாதர்தம் அவயவந் தெரியவே சீகரஞ் சிதறுதற்குத் தினவுதின்னுங் கையினனாயினும், வெவ்விய இலங்கைவேந்தன் வெகுளிக்கு உள்கி அங்ஙனே அத்தினவின் ஊக்கத்தை அடக்கிக்கொள்வதுமன்றி, தான் உன்னுமலே சென்று திவலை ஒன்றிரண்டு மங்கையர் அங்கம் தெரிய அவர் துகிலுற் றோயுமாயினும், குறும்பு மதியினன் இவன் எண்ணியே இது இயற்றினனெனும் பழியினிற்கு இலக்காகும்படி தன்னை இன்று நிறுத்திய முன்னைச் சரிதத்தை நினைத்து, தன் கருத்து முற்றுஞ் செலுத்தி, "நவ்வித்தோகையர் துகிலிற்றோயுமென்பதோர் துணுக்கத்தோடும்!" துருத்தித்தொழிலைப் புரிந்தான் என்றால், அதுகாண, கள்ளமுடைப் புன்முறுவல் மறலிக்கு வாராமற் றீருமோதான்!

இன்னுமொன்றுளது. தானுமேயொரு குற்றேவல் இவ் வையிரு தலையினோற்கு முறைசெய்துகொண்டிருக்கு மவ் வெருமையூர்தி ஏனையோர் செய்தி நோக்கிச் சிரிப்பது தகுதியாமோ வெனச் சிந்திப்பார் ஒன்றினை உணர்தல் வேண்டும். வெந்திற லரக்கர்தம் உயிரினைக் குடிக்க அஞ்சி ஆசையால் உழன்றிருந்த கூற்றுவன் தாடகையால் அறிந்த சுவை, கரதூடணாதியோரால் முதிர்ந்து, இனி நிருதர்குலத் தலைவன் உயிரை உண்ண நாழிகை எண்ணி எண்ணிக் கூறிக்கொண்டிருக்கின்றானல்லது உண்மையை நோக்குங்கால் அவன் புரியுந்தொழில் வேறொன்றுமன்று. "ஏ, ஏ, இராவண, இற்றதோர் மூக்குடன் நின்னொரு பின்னவள் இதோ வந்திங்குச்சேருவாள். இதன்பின், நின்சிரமொவ்வொன்றிற்கும் ஒவ்வோர் திங்கள் விதித்தாலென்ன இன்னும் மாதமோர் பத்தினகவயின் நின் கடிகையின் இறுதியைக் கழறநின்றுளேன். இடையிருக்குங் காலத்தை நான் கணக்கிட்டுக் கழிக்கின்றேன், கண்டாய்," எனத் தன்னுளே நினைத்தபோது நிகழ்கின்ற நகையினால் பிரியும் தன் சிறு இதழினை மறைப்பதற்குச் சேலையால் புதைக்கின்ற பெற்றியோராமல், கூற்றுவனுமஞ்சத் தான் கொற்றங் கொண்டுளதாக மதித்து அவ்விதியிலி மகிழ்வானேல், பின்னருமொருமுறை முறுவலித்தலல்லால் புரிதற்கு வேறு யாதுளது!

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

கலா நிலயச் சொல்லூடாட்டம் 9.

இடம்—வலம்

1. கடலில் விளைவது.
3. இறக்க.
6. ஓர் அளவு.
7. ஐவர்களிலொரு
9. இறத்தல். [வன்.
11. செய்யுள்.
13. வண்டு.
15. விறைப்பு.
17. கூற்றுவன்.
18. கசப்பு.
20. குழந்தைகள்.
23. ஓர் மரம்.
24. சுவர்.
25. உண்மை பேசுகின்
28. குதிரை. [றவன்.
30. பிளக்கக் கடவாய்.
31. தராசு.
32. குளம்.

■	1		2	■	3	4	■	5
6		■	7				8	
9		10		■		■		■
	■	11		12	■	13		14
15	16		■	17			■	
■	18		19		■	20	21	
22	■	23		■	24			■
25	26			27		■	28	29
30		■	31		■	32		

மேல்—கீழ்

1. உணவு.
2. மகள்.
3. ஓர் உபாயம்.
4. முதலை.
5. காடு.
6. ஓர் மலர்.
8. பிணம்.
10. உடைத்தார்.
12. பெண்.
13. ஓர் வருடம்.
14. கழுத்தின்பின்புறம்.
16. அதிகம்.
19. செழித்து.
21. வாய்க்கால்.
22. தலைவி.
24. அரசன்.
26. ஓர் பாத்திரம்.
27. சிரசு.
29. குடுமி.

கடைசிநாள் :—1932 வருடம், அக்டோபர் மாதம், 31 தேதி.

பரிசு:—கலா நிலயம், 1928, 1930, 1931 ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப் லெதர் - கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணுவுக்குக் காலணுத் தபால் தலைகள் (பதினறு) அனுப்புதல் வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணு பெறுமான போஸ்டல் ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழையற நேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கு மட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4. இவ்வண்ணம் அவ்வவ் முறை பரிசு பெற்றவர்கள் தவிர, நேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களை யெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப் போட்டு அதனில் பெயர் வருகிற ஒருவருக்கும், மேல் குறித்த வருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும். இதுகாறும் நேரியவிடைகள் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்களும் இப் பரிசிற்கு உரியவராவார்.

5. சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லா விடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

விடைகளை மானேஜர், கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை.
என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

சொல்லூடாட்டம் நம்பர் 7. விடையும் முடிவும்.

நேரான விடை :—

இடம்—வலம்:—1. மண்பதை; 4. பானுமதி அல்லது பாநுமதி; 7. கைத்தாய்; 9. கசை; 10. சுதை; 12. திலகவதி; 14. வசியம்; 17. பரதர்; 18. காம்போதி; 20. வல்லை; 21. முசு; 22. திரை; 23. வெறி; 24. நகை; 25. நாந்தகம்; 17. திடல்; 28. பிகம்.

மேல்-கீழ்:-1. மஞ்சு; 2. பகை; 3. தைத்தியர்; 4. பாய்க; 5. மகதி; 6. திசை; 8. தாலம்; 11. தைவரல்; 13. வனம்; 15. சிதலை. 16. முதிரை; 17. பவணந்தி; 18. காசு; 19. போதிகை; 21. முறிதல்; 23. வெந்; 24. நம்பி; 25 நால்; 26. தோம்.

நேரியவிடை யனுப்பியவர்:—S. N. இராமசுவாமி ஐயங்கார், சங்கரிதுர்க். S. T. பொன்னம்பலநாத முதலியார், ஸ்ரீ வைகுண்டம். R. தியாகராஜன், காயாமொழி. R. திருமலை ஜக்கையா, கோம்பை. K. அல்லாபிச்சை, கோம்பை. K. A. S. பத்மநாபன், திருப்பத்தூர். V. இராஜாராமன், ஆலமரத்துப்பட்டி. A. சுருளியாண்டி, கோம்பை. A. P. L. ஷண்முகம் செட்டியார், வேகுப்பட்டி. N. நாகசுந்தரம், உத்தமபாளயம். V. சரவணமுத்து, மன்னர். U. N. இராமசுவாமி நாயுடு, உடுமலைப்பேட்டை; சி. கந்தையா, மன்னர்.

பரிசு பெற்றவர் :—A. சுருளியாண்டி, கோம்பை.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல எட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

திருக்குறள்
மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு **0-12-0**

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனூர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட்குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணு **0-6-0**

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM

PURASAWALKAM :: VEPERY, MADRAS.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினுல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளை யறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. கள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல,

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0

காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னுப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

மாகாணச் சட்டசபைகளிலுள்ள கலப்புத் தொகுதிப் பதவிகளில் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்குப் பின் கண்டபடி பதவிகள் ஒதுக்கப்படும்:—

• சென்னை 30, சிந்துவுடன்கூடிய பம்பாய் 8, பஞ்சாப் 8, பிஹார் ஒரிஸா 18, மத்திய மாகாணம் 20, அஸ்ஸாம், 7, வங்காளம் 30, ஐக்கிய மாகாணம் 20.

பிரதம மந்திரியின் தீர்ப்பில் மாகாணச் சட்டசபைகளிலிருக்குமென்று அறிவிக்கப்பட்டுள்ள பதவிகளின் மொத்தத் தொகையை ஆதாரமாகக் கொண்டே இந்தக் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

(2) இப்பதவிகளுக்குக் கலப்புத் தொகுதிமூலம் தேர்தல் நடக்கும். ஆனால் அத்தேர்தல் பின்கண்ட முறைக்குட்பட்டு நடக்கும்:—ஒரு தொகுதியிலுள்ள பொதுவாக்காளர் ஜாப்தாவில் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மெம்பர்களெல்லாம் ஒருவாக்காளர் (வோட்டர்) கோஷ்டியாக இருப்பார்கள். இந்தக் கோஷ்டியார் ஒதுக்கிவைக்கப்பட்ட ஒவ்வொரு பதவிக்கும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த 4 பேர்களை ஒரே வோட் முறை மூலம் தெரிந்தெடுப்பார்கள். இந்தப் பூர்வாங்கத் தேர்தலில் அதிகப்படியான வாக்குகளைப் பெறுகின்றவர்களே, பொதுத்தொகுதி வாக்காளர்களால் தெரிந்தெடுக்கப்படவேண்டிய தேர்தலில் அபேக்ஷகர்களாக நிற்பார்கள்.

(3) மத்திய சட்டசபையிலும், ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு, 2-வது ஷரத்தில் மாகாணச் சட்டசபையில் அவர்களது பிரதிநிதித்துவத்திற்காகச் செய்யப் பட்டிருக்கும் ஏற்பாட்டைப்போலுள்ள ஏற்பாட்டின் மூலமே பிரதிநிதித்துவ மளிக்கப்படும். (அதாவது அவர்களுக்குப் பதவிகள் ஒதுக்கப்பட்டு, கலப்புத் தொகுதியில் நடக்கும் தேர்தல் மூலமே பிரதிநிதித்துவ மளிக்கப்படும்) ஆனால் முதலில ஒடுக்கப்பட்ட வகுப்பு வாக்காளரே ஒதுக்கப்பட்ட பதவிகள் ஒவ்வொன்றுக்குத்தங்களில் 4-பேரை ஒரேவோட் முறை மூலம் தெரிந்தெடுப்பார்கள். கலப்புத்தொகுதியில் நடக்கும் தேர்தலுக்கு அவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட 4 பேர்களே அபேக்ஷகர்களாக நிற்பார்கள்.)

(4) மத்திய சட்டசபையில் பிரிட்டிஷ் இந்தியாவுக்காகப் பொதுத்தொகுதியில் ஒதுக்கப்படும் பதவிகளில் 100க்கு 18-வீதமுள்ளதை ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கிக் கொடுக்கப்படும்.

(5) மத்திய சட்டசபைக்கும் மாகாணச் சட்டசபைக்கும் தெரிந்தெடுக்கப்படுவதற்காக ஒடுக்கப்பட்ட வகுப்பு வாக்காளரே பூர்வாங்கமாகத் தங்களில் 4 பேரை ஒவ்வொரு பதவிக்கும் தெரிந்தெடுத்துக் கலப்புத் தொகுதியில் அபேக்ஷகராக நிறுத்த வேண்டுமென்ற முறை 10 வருஷங்களுக்குப் பிறகு முடிவுக்கு வரும். ஆனால் 6-வது ஷரத்தில் கண்டபடி பரஸ்பர உடன்பாட்டின் மூலம் இதனை இந்த 10 வருஷங்களுக்கு முன்னதாகவும் முடிவுக்குக் கொண்டு வரலாம். இவ்வாறு பரஸ்பர உடன்பாட்டின் மூலம் முன்னதாகவே இது முடிவுக்குக் கொண்டுவரப்படா விட்டால் இது 10 வருஷங்களானவுடன் தானாக முடிவுக்கு வரும்.

(6) 1, 4-வது ஷரத்துக்களில் வகைசெய்யப்பட்டிருக்கின்றபடி மாகாண சட்டசபைகளிலும், மத்திய சட்டசபையிலும் பதவிகளை ஒதுக்கிவைப்பதன்மூலம் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவமளிக்கும் முறை இந்த உடன்பாட்டில் சம்பந்தப்பட்டிருக்கும் வகுப்பார்கள் பரஸ்பர உடன்பாட்டின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரும்வரை நீடித்திருக்கும்.

(6) லோதியன் கமிட்டி யாதாஸ்தில் குறிப்பிட்டபடியுள்ள மத்திய சட்டசபை, மாகாண சட்டசபை இவற்றிற்கான வாக்குரிமை யோக்கியதைகளே ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு ஏற்பட்டிருக்கும்.

(8) ஸ்தலஸ்தாபனங்களுக்கான தேர்தல் சம்பந்தமாகவோ அன்றி கவர்ன்மெண்ட் ஊழியவர்க்கங்களுக்கு நியமனங்களைச் செய்வது சம்பந்தமாகவோ ஒடுக்கப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவர் என்ற காரணங்கொண்டு எவருக்கும் எவ்விதமான அசௌகரியமும் இருக்கக்கூடாது. கவர்ன்மெண்ட் ஊழிய வர்க்கங்களில் நியமனஞ்செய்யப்படுவதற்காக நிர்ணயிக்கப்படும் கல்வி யோக்கியதைகளைப் பெற்றிருப்பதற்குட்பட்டு இவ்விஷயங்களில் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு நியாயமான பிரதிநிதித்துவத்தை வாங்கிக்கொடுக்கச் சகல முயற்சியும் செய்யப்படும்.

(9) ஒவ்வொரு மாகாணத்திலும் கல்வி கிராண்டிலிருந்து ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்குக் கல்வி வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காகப் போதியதொகையைத் தனியாக ஒதுக்கி வைக்கப்படும்.

"சுதேசமித்திரன்"

இந்துத்தலைவர்க்கும், தீண்டாதார் தலைவர்க்கும் ஏற்பட்ட இவ்வொப்பந்தத்தை அரசாங்கத்தார் பெரும்பாலும் ஏற்றுக்கொண்டனர். மகாத்மா காந்தியும் தாம் மேற்கொண்டிருந்த உண்ணாவிரதத்தை முடித்து உணவு அருந்தினர்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்



டானிக்குகள் :	தைலங்கள் :
ச்யாவனப்ராச	அமிர்தாமலக
ஜீவஸுதா	பிருங்காமலக
பாதாமி லேகியம்	ஸுகுமார
தந்வந்தரி லேகியம்	ஹிமஸாகர

"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)

காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணு)

ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணு 4) கோரோஜனை மாத்திரை, (அணு 6) பால சஞ்சீவினி (அணு 4)

I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. மெடிகேடட்-டப்பி

(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

KALANILAYAM
Reg. No. M. 2324.

— சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நெ:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனுேல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்ளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும, பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

ஊமல்ஸ்டீல் தகட்டினுல் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்ருேம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலங் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

:: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள்

அமிர்தார்ணவ லேகியம்

அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மார்பு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

கேட்போருக்கு இனுமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)

மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணு 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணு 3.

ஏழணு ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.

ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில், நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரண்ய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5, மற்ற பர்வம் அச்சில்

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over ...	... Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of ...	... 16.54 %
Claims paid up to end of 1931 over ...	... Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)